விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 02 திங்கட்கிழமை (15.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 027

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்
UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 950/-
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி 18, பிரதான வீதி, நெல்லியடி கிளிநொச்சி, மன்னார்.
077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET

# ஜனாதிபதியும் பிரதமரும் களவு செய்யமாட்டார்கள்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கை



(கொழும்பு) தற்போதைய அரசாங்கத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் களவு செய்யமாட்டார்கள். என்றாலும் அமைச்சர்களும் சில அதிகாரிகளும் தவறு செய்தவர்களாக இருக்கலாம். எனினும் அவர்களை ஒன்றாக கொன்றொழித்து விட முடியாது. படிப்படியாகவே தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க முடியும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## மதுபானம் தொடர்பான வர்த்தமானி இரத்து!

(கொழும்பு)

கடந்த வாரம் மதுபானம் தொடர்பில் வெளியான வர்த்தமானியை ரத்து செய்ய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அகலவத்தையில் நேற்று 24

## உறங்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

உணவருந்திவிட்டு படுக்கைக்கு சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் காலையில் சடலமாக 23

## அடுத்த வாரம் இலங்கை வரும் இரு தலைவர்கள்

(கொழும்பு)

இரண்டு வெளிநாடுகளின் அரச தலைவர்கள் அடுத்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவிரு 24

## மகிந்த அணிக்கு முதுகெலும்பிருந்தால் சு.கவை விட்டு விலகிப்பார்க்கட்டும்!

### மைத்திரி சவால்

(கொழும்பு)

புதிய கட்சியைக் கட்டியெழுப்புகின்றவர்கள் அரசியல் முதுகெலும்புள்ளவர்களாயின் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகி அக் கட்சியை அமைக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புதிய கட்சியில் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளவில்லை என ஊடகக் கலந்துரையாடலில் குறிப்பிடுகின்றவர்கள் ஸ்ரீலங்கா சுத 23

## வவுனியாவில் கார் கோர விபத்து இருவர் பலி; இருவர் படுகாயம்



(மல்லாவி)

வவுனியா - குருமன்காடு பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தைப்பொங்கலை கொண்டாடுவதற்கு பயணித்து கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளமை பெரும் சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

அதிவேகம் காரணமாக நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படு 24

## யாழ்.வந்த ஜேர்மன் நாட்டவர் திடீர் நெஞ்சுவலியால் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை சுற்றிப்பார்க்க வந்த வெளிநாட்டவர் ஒருவர் திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியால் உயிரிழந்துள்ளார்.

ஜேர்மன் நாட்டை சேர்ந்த எக் கோன் ரியென் (வயது 63) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 26 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை சேர்ந்த பெண் ஒருவரை திருமணம் முடித் 23

## பதவி உயர்வை எதிர்பார்த்த சிப்பாய் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

பதவி உயர்வை எதிர்பார்த்திருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்டு நேற்று முன் 24

## வல்வை. பட்டத்திருவிழா பல்லாயிரம் மக்கள் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பிக்கும் வகையில், யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை 24

## "தமிழர்களால் பெருமைப்படுகிறோம்" இங்கிலாந்து பிரதமர் பெருமிதம்

(லண்டன்)



உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் பொங்கல் திருநாளை கொண்டாடி வரும் நிலையில், பல உலக அரசியல் தலைவர்களும், பிரபலங்களும் தமிழில் வாழ்த்துக்களை தெரிவித்து வருகி 24

## இளைஞனை தூக்கிய பாரிய பட்டம்!

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி புத்தூர் சந்திக்கு அண்மையில் பட்டம் ஏற்றிய இளைஞர் ஒருவரை பல அடி உயரத்திற்கு இழு 24

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"



ப்ரத்யங்கிரா சக்தி பீடம்
ஸ்ரீ மஹா கால பைரவர்
ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவி தேவஸ்தானம்
வட்டுக்கோட்டை ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவிக்கு
பிரதி அமாவாசை தோறும்
நாளை (16.01.2018) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணி வரை
மஹா நிகும்பலா ஹோமம்
(மிளகாய் வற்றல் யாகம்)

நடைபெறும் இவ்யாகமானது துர்சக்திகளை நிர்மூலமாக்கி சகல தடைகளையும் நீக்கி வெற்றி தரும் மிகப்பெரிய வழிபாடாகும். மஹா நிகும்பலா ஹோமமானது திருமண தோஷம், ஆயுள் தோஷம், நாக தோஷம், சனி தோஷம், பிறரால் ஏவப்பட்ட மாந்திரீகங்களைப் போக்க விஷேடமான சாந்திப் பரிகாரமாகும். அனைத்து அடியார்களும் மிளகாய் வற்றலை கொண்டு வந்து தங்கள் கைகளாலேயே யாகத்திலிட்டு அம்பாளின்ஆசிகளைப் பெறுக.

பிரதி தேய்பிறை பஞ்சமி திதியில் வாராஹி தேவிக்கு ஹோமம், பிரதி தேய்பிறை அஷ்டமியில் ஸ்ரீ மஹா கால பைரவருக்கு (அட்டமி) விசேட பூஜை

ப்ரத்யங்கிரா சக்தி பீடம்
தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.
(சங்கரத்தை சந்தி அருகாமையில்)
தொ.பே இல.: 021 225 2020,
(2384)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புலிகளின் கீதங்கள் அங்கஜன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ.சு.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் விடுதலைப்புலிகளின் எழுச்சி கீதங்கள் ஒலிக்கவிடப்பட்டமைக்கு அங்கஜன் இராமநாதன் விளக்க மளித்துள்ளார்.

தமிழ்த் தலைமைகள் தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றி வருவதனால் தான் "நித்திரையா தமிழா..." எனும் பாடலை ஒலிக்க விட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் அங்கஜன் மேலும் தெரிவிக்கையில்,

"அந்த நிகழ்வில் ஒலிக்கவிடப்பட்ட பாடல் தமிழர் எழுச்சிக்கான பாடல். எந்த விதமான உள்நோக்கத்துடனும் அதை பார்க்கத் தேவையில்லை.

நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள். அந்த செய்தியில் எந்த உண்மையும் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் என்ற உணர்வு, உணர்ச்சி எப்பொழுதும் எம்மிடம் இருக்கும்.

தமிழ்த் தலைமைகள் எங்களை தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டு இருக்கும் போது, நாங்கள் நித்திரையாக இருக்க கூடாது.

நித்திரையில் இருந்து எழுந்து வர வேணடும். அதனால் தான் அந்த பாட்டை ஒலிக்க விட்டோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு-1)

## அறிக்கையில் தவறு ரவி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணை முறி அறிக்கையை தயாரித்த அதிகாரிகளின் குறைபாடுகள் காரணமாக, அந்த அறிக்கையில் தவறு இருக்க வாய்ப்புள்ளதாக முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு அறிக்கை கிடைத்த பின்னர் எமக்கும் அறிக்கை கிடைக்கும். பொய்யான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதால்தான், அறிக்கையை வெளியிட முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது.

ஆணைக்குழுவை ஜனாதிபதி அமைத்திருந்தாலும், அதில் அங்கம் வகித்தவர்கள் தவறாக வழங்கியிருக்கலாம்.

இந்த நிலையில், உண்மை நிலைமையை கண்டறியவுள்ள சவாலையே நாம் முகங்கொடுக்கிறோம் என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (மு-1)

## சபரிமலையில் மகர ஜோதி லட்சக்கணக்கானோர் தரிசனம்

பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலில் மகர விளக்கு பூஜையை முன்னிட்டு கடந்த மாதம் 30ஆம் திகதி நடை திறக்கப்பட்டது. நாள்தோறும் சுவாமிக்கு நெய் அபிஷேகம், புஷ்பாபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு வழிபாடுகள் நடைபெற்று வந்தன.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான மகர விளக்கு பூஜை மற்றும் மகர ஜோதி தரிசனம் நேற்று நடைபெற்றது.

திருவாபரண பெட்டிகள் நீலிமலை, சரம் குத்தி, மரக்கூட்டம் வழியாக மாலை 6.20 மணிக்கு சபரிமலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு திருவாபரண பெட்டிகளுக்கு, திருவிதாங்கூர் தேவஸ்தானம் சார்பில் 18-ம் படிக்கு கீழ் பகுதியில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, 18-ம் படி வழியாக திருவாபரண பெட்டிகளை சன்னிதானத்துக்கு எடுத்துச் சென்றார்கள். அந்த ஆபரணங்கள் சுவாமி ஐயப்பனுக்கு அணிவிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. இந்த சமயத்தில் தான் பொன்னம்பல மேட்டில் மாலை 6.30 மணியளவில் 3 முறை மகர ஜோதி தென்பட்டது.

பொன்னம்பல மேட்டில் மகர ஜோதியாக காட்சி தரும் சாமியை தரிசித்த ஐயப்ப பக்தர்கள் ஐயப்பா... ஐயப்பா.... என்று சரணம் கோஷம் எழுப்பினர்.

மகரஜோதியைக்கண்டு பக்தர்கள் பரவசம் அடைந்தனர். சபரிமலையில் மகர விளக்கு. மகர ஜோதி தரிசனத்தையொட்டி இது வரை காணாத அளவுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. (மு-1)



கொழும்பு கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற விசேட தைப்பொங்கல் வழிபாடுகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

## பெருவில் பயங்கர நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை



பெரு நாட்டின் கடலோர பகுதியில் 7.3 ரிக்டர் அளவுக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து அப்பகுதி முழுவதும் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பெரு நாட்டின் கடலோர பகுதியில் காலை நேரத்தில் பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் 7.3 ரிக்டர் அளவில் பதிவானதாக அமெரிக்க புவியியல் மையம் கூறியுள்ளது. நிலநடுக்கம் கடலுக்கு அடியில் 7.5 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவிக்கையில், இத்தகைய சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனால் 300 கி.மீ. சுற்றளவில் வசிக்கும் கடலோர பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இதனால் எழும்பும் கடல் அலைகள் குறைந்தபட்சம் பெரு பகுதியில், 1 முதல் 3 அடி வரையும் சிலி பகுதியில் 1 அடியும் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-1)


### கார், வான் வாடகைக்கு தேவை

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.

**0710404978**

(2409)

### மணமகள் தேவை

1988இல் பிறந்த புனர்பூச நட்சத்திரம் பாவம் 09 IT (Software Engineer) கல்வித் திணைக்களத்தில் கடமை புரியும் மணமகனுக்கு அரச தொழில் புரியும் மணமகளை எதிர்ப்பார்க்கின்றோம்.

**தொடர்பு:-0778771752**

(சு-1222)


## மரண அறிவித்தல்

### தாமு.பேரின்பநாதன் (பேரின்பம்)

(ஓய்வுநிலை பொறியியலாளர்-இலங்கை வங்கி)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 10 - 1941 | 13 - 01 - 2018 |

அல்வாயைப் பிறப்பிடமாகவும், "ஈஸ்வரி இல்லம்", சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தாமு.பேரின்பநாதன் கடந்த சனிக்கிழமை (13.01.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமு-பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராசசிங்கம்-பிள்ளையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், வீரசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), தவநாயகி மற்றும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிந்தாமணி, தங்கம்மா, அம்பிகாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்லத்தம்பி மற்றும் காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, அப்பையா, கதிரவேலு, இராசேந்திரம், கணேசு ஆகியோரின் மைத்துனரும், சிவலோஜினி, பத்மலோஜினி (உத்தியோகத்தர் யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், புலேந்திரகுமார் (ஆசிரியர் யா/வயாவிளான் மத்திய கல்லூரி) அவர்களது அன்பு மாமனாரும், பிறிதிவன் (மாணவன் யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), டர்சிகன் (மாணவன் யா/சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரது அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (15.01.2018) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்.

சூராவத்தை, சுன்னாகம்

மருமகன்-தே.புலேந்திரகுமார் (0776158800)

(சி-1225)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:-14.10.1937
இறப்பு:-12.01.2018

நல்லூர் கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சுந்தரலிங்கம் சத்தியேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

**சுந்தரலிங்கம் சரஸ்வதி**

அவர்கள் 12.01.2018 வெள்ளிக்கிழமை காலமான செய்தி அறிந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2018) காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

கமநல அபிருத்தி திணைக்கள நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம்

(சு-1223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் பற்றிய இரகசியங்களை ஜாலியவிடம் பெற அமெரிக்கா முயற்சி!

## அங்கிருந்து வெளியேற முற்பட்டால் கைது இங்கு ஆஜராகாவிட்டால் பிடியாணை தன்னிலையை வெளிப்படுத்தி அறிக்கை



(கொழும்பு)

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய, நீதிமன்றத்தில் ஆஜராக முடியாமைக்கான காரணங்களை தெளிவுபடுத்தி ஊடகங்களுக்கான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ஜாலிய விக்ரமசூரியவை உடனடியாக கைது செய்வதற்கான பிடியாணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் கடந்த 5 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டிருந்தது.

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம், தனது கண் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல நீதிமன்றத்தில் அனுமதி வேண்டியிருந்த ஜாலிய விக்ரமசூரியவுக்கு, 08 வாரங்களுக்கு உலகில் எந்த நாட்டிற்கும் சிகிச்சைக்காக செல்ல நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா நோக்கி பயணம் செய்தார். எவ்வாறாயினும் நிபந்தனையின் படி உரிய தினத்தில் மீண்டும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததன் காரணமாக, கடந்த 2017 நவம்பர் மாதம் 17 ஆம திகதி அவருக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், மீண்டும் ஜனவரி 5ஆம் திகதி அவரை கைது செய்வதற்காக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் தன்னால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது போனமைக்கான காரணங்களை விளக்கி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற அவர், மேலதிக சிகிச்சைக்காக வேறு ஒரு நாட்டிற்கு பயணிக்க அமெரிக்க விமான நிலையத்திற்கு வந்த போது, அமெரிக்க விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதுடன், அமெரிக்காவில் இருந்து வெளியேற முடியாதெனவும் அவ்வாறு வெளியேற முற்பட்டால் கைது செய்ய நேரிடும் எனவும் அமெரிக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தன்மீது விசாரணை நடைபெறுவதால் தன்னை அமெரிக்காவை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டாம் என இலங்கை வெளிவிகார அமைச்சு அமெரிக்க அரசிடம் முன்வைத்த கோரிக்கையே இதற்கு காரணம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜராகாவிட்டால் தன்னை கைது செய்ய உத்தரவிட்டுள்ள அதே வேளை அமெரிக்காவில் இருந்து வெளியேற முற்பட்டால் கைது செய்ய இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ள நிலையில் தன்னால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையில் நடந்ததாக கூறப்படும் போர்க் குற்றங்களைப் பற்றிய தகவல்களை தெரிவித்தால், தனக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியதாகவும், எனினும் தான் அதை கடுமையாக நிராகரித்ததாகவும் ஜாலிய விக்ரமசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

## தேர்தலில் போட்டியிடும் 18 வேட்பாளர்கள் கைது

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேரதலை முன்னிட்டு பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக 18 வேட்பாளர்கள் உட்பட 167 பேர் கைது செயயப்பட்டுள்ளதாக பொலிஸ தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதியில் இருந்து நேற்றுக்காலை 6 மணி வரையான காலத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 55 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் அவை சம்பந்தமாக 10 வேட்பாளர்கள் உட்பட 119 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் தேர்தல் முறைபாடுகள் சம்பந்தமாக 8 வேட்பாளர்கள் உட்பட 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக நேற்றைய தினத்தில் மாத்திரம் 13 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)


# தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கருத்தமர்வும் கலந்துரையாடலும்

**தலைமை உரை**

வட மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான

**கௌரவ நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்**

---

**"வடக்கு – கிழக்கு தமிழர்தம் உரிமைகளின் கேடயமாக சர்வதேச சட்டம்"**

"International Law as a shield of the rights of the Tamils of the North - East".

**பேராசிரியர் முத்துக்குமாரசாமி சொர்ணராஜா** LLB(Cey), LLM(Yale), PhD, LLD (Londan)

**சட்டத்துறை பேராசிரியர், தேசிய பல்கலைக்கழகம் சிங்கப்பூர்**

---

**"இடைக்கால அறிக்கை – மாயைகளை கட்டுடைத்தல்"**

"Interim Report Deconstructing Myths"

**இ. குமாரவடிவேல் குருபரன்** LLB, GCL (Master on Law - London)

**சட்டத்துறை தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்**

•

**இடம்**

யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்

**காலம்**

16-01-2018 நாளை செவ்வாய்க்கிழமை
நேரம்: மாலை 4 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

**தமிழ் மக்கள் பேரவை** Tamil People's Council (TPC)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹோலி அரைச்சதம்: தெ.ஆ விடாப்பிடி



தென்னாபிரிக்காவுக்கு எதிராக செஞ்சூரியனில் நடக்கும் இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி அரைச்சதம் கடந்தார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

கேப் டவுனில் நடந்த முதல் டெஸ்டில், தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட், செஞ்சூரியனில் நடக்கிறது. முதல் நாள் முடிவில், முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி, 6 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அணித் தலைவர் டு பிளசி (24), மகராஜ் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**இஷாந்த் அசத்தல்**

2ஆம் நாள் ஆட்டத்தில். முதல் இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு கேஷவ் மகராஜ் (18) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் டு பிளசி, டெஸ்ட் அரங்கில் தனது 17ஆவது அரைச் சதத்தை பதிவு செய்தார். 8ஆவது விக்கெட்டுக்காக 42 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, இஷாந்த் 'வேகத்தில்' ரபாடா (11) ஆட்டமிழந்தார். தொடர்ந்து அசத்திய இஷாந்த் பந்தில் டு பிளசி (63) போல்டானார். அஷ்வின் 'சுழலில்' மோர்கல் (6), சிக்கினார்.

முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி, 335 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

லுங்கே நிதிடி (1) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியா சார்பில் அஷ்வின் 4, இஷாந்த் சர்மா 3 விக்கெட் கைப்பற்றினர்.

**புஜாரா ஏமாற்றம்**

பின் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு முரளி விஜய், லோகேஷ் ராகுல ஜோடி சுமாரான ஆரம்பம் வழங்கியது. மோர்னே மோர்கல் 'வேகத்தில்' ராகுல் (10) ஆட்டமிழந்தார். தேவையில்லாமல் ஒரு ஓட்டத்துக்கு ஓடிய புஜாரா (0), 'ரன்-அவுட்' ஆனார். பின் இணைந்த முரளி விஜய், அணித் தலைவர் ஹோலி ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. மோர்கல் வீசிய 12ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்த ஹோலி, டெஸ்ட் அரங்கில் தனது 16ஆவது அரைச்சதமடித்தார்.

**ரோகித் 10 ஓட்டங்கள்**

3ஆவது விக்கெட்டுக்கு 79 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது மகராஜ் 'சுழலில்' சிக்கிய முரளி விஜய் (46) அரைசதமடிக்கும் வாய்ப்பை இழந்து வெளியேறினார். அடுத்து வந்த ரோகித் சர்மா (10), ரபாடா 'வேகத்தில்' வெளியேறினார். லுங்கே பந்தில் பார்திவ் படேல் (19) சரணடைந்தார். இரண்டாம் நாள் முடிவில், முதல் இன்னிங்ஸில் இந்திய அணி, 5 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்கள் எடுத்து, 152 ஓட்டங்களால் பின்தங்கி உள்ளது. ஹோலி (85), ஹர்திக் பாண்ட்யா (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர். தென்னாபிரிக்கா சார்பில் மகராஜ், மார்கல், ரபாடா, லுங்கே ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

## ஹர்பஜன் தமிழில் பொங்கல் வாழ்த்து

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், தமிழக மக்களுக்கு தமிழில் பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வேகமும், விவேகமும், உழைப்பும், தூய்மையும் சொத்தாய் கொண்ட தமிழ் மக்கள் வாழ்வில், மகிழ்வோடு பொங்கட்டும் புதுப் பொங்கல்... என் இதயம் கனிந்த தமிழர் திருநாள் வாழ்த்துக்கள்

என்றும் அன்புடன் உங்கள் ஹர்பஜன் சிங்.

சீக்கிய இனத்தவரான இவர், தமிழில் வாழ்த்து தெரிவித்துள்ளது தமிழக மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.



Harbhajan Turbanator
@harbhajan_singh

வேகமும் , விவேகமும் , உழைப்பும் , தூய்மையும்
சொத்தாய் கொண்ட தமிழ் மக்கள் வாழ்வில்
மகிழ்வோடு பொங்கட்டும் புது பொங்கல் என் இதயம்
கனிந்த தமிழர் திருநாள் நலவாழ்த்துக்கள்

என்றும் அன்புடன் உங்கள்,
ஹர்பஜன் சிங்
10.22 AM - Jan 14, 2018
1,220 6,657 18,696

### சதமடித்து தூள் கிளப்பினார் ரோய்

## அவுஸ்திரேலியாவை 'விரட்டி விரட்டி' புரட்டி எடுத்தது இங்கிலாந்து




ஜேசன் ரோய் சதமடித்து தூள் கிளப்ப, ஆஷஸ் டெஸ்ட தொடரில் ஏற்பட்ட படுதோல்விகளுக்கு ஒரு நாள் தொடரில் பதிலடி கொடுக்க ஆரம்பித்தது இங்கிலாந்து.

அவுஸ்திலேியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கு பற்றுகிறது.

இத்தொடரின் முதல் ஒரு நாள் போட்டி நேற்று மெல்போர்னில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித தலைவர் ஒய்ன் மோர்கன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**பின்ஞ் சதம்**

அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர் (2) ஏமாற்றினார். அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் (23) சோபிக்கவில்லை. பின் இணைந்த் ஆரோன் பின்ஞ் (107), மிட்சல் மார்ஷ் (50) ஜோடி கைகொடுத்தது. மறுமுனையில் அசத்திய மார்கஸ் ஸ்ராய்னிஸ் (60) தன் பங்கிற்கு அரைச்சதம் கடந்தார். அவுஸ்திரேலிய அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்கள் எடுத்தது.

**ரோய் விளாசல்**

சவாலான இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு பேர்ஸ்டோவ் (14), அலெக்ஸ் ஹேல்ஸ் (4) ஏமாற்றினர். ஜோ ரூட் அரைச்சதம் கடந்தார். அபாரமாக ஆடிய ஜேசன் ரோய், (180 ஓட்., 151 பந்து, 5 சிக்ஸர், 16 பவுண்டரி) ஒருநாள் போட்டியில் தனது 4ஆவது சதமடித்தார். டிராவிஸ் ஹெட் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய, மொயீன் அலி வெற்றியை உறுதி செய்தார். இங்கிலாந்து அணி 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 308 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரூட் (91), மொயீன் அலி (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**180**

அபாரமாக ஆடிய ஜேசன் ரோய் 180 ஓட்டங்கள் விளாசினார். இதன் மூலம் ஒருநாள் போட்டி அரங்கில், ஒரு இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்த இங்கிலாந்து வீரர் என்ற சாதனை படைத்தார். இதற்கு முன், கடந்த 2016ல் நொட்டிங்காமில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்தின் அலெக்ஸ் ஹேல்ஸ் 171 ஓட்டங்கள் எடுத்திருந்ததே சாதனையாக இருந்தது.

**221**

மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஜேசன் ரோய், ஜோ ரூட் ஜோடி 221 ஓட்டங்கள் சேர்த்தது. இதன் மூலம், ஒருநாள் போட்டியில் 3ஆவது விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த இங்கிலாந்து ஜோடியானது. இதற்கு முன், 1991ல் லோர்டஸில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்தின் ஹிக்-பேர்பிரதர் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 213 ஓட்டங்கள் சேர்த்திருந்ததே அதிகபட்சமாக இருந்தது.

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணம்*

## இலங்கை, இந்தியா அமர்க்கள ஆரம்பம்

'ஜூனியர்' உலகக் கிண்ணத் தொடரை, பிரித்வி ஷா தலைமையிலான இந்திய அணியும் இலங்கை அணியும் வெற்றியுடன் ஆரம்பித்தன.

முதல் லீக் போட்டியில், 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இந்தியா.

நியூசிலாந்தில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில், 19 வயதுக்குட்பட்டோருககான உலக கிண்ண (50 ஓவர்) தொடர் நடக்கிறது.

நேற்று, மவுண்ட் மவுன்கனுய் நகரில் நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் இந்திய - அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் பிரித்வி ஷா, முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**சுப்பர் ஆரம்பம்**

இந்தியாவுக்கு அணித் தலைவர் பிரித்வி ஷா, மன்ஜோத் கர்லா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அவுஸதிரேலிய பந்துவீச்சை எளிதாக சமாளித்த இவர்கள் இருவரும் அரைச்சதம் கடந்தனர். முதல் விக்கெட்டுக்காக 180 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, பிரித்வி ஷா (94) சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த மன்ஜோத் 86 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுபம் கில் (63), தன்பங்கிற்கு அரைச்சதமடித்தார். இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 328 ஓட்டங்கள் எடுத்தது. கம்லேஷ் (11), ஆர்யன் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக எட்வேர்ட்ஸ் 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

**சிவம் அசத்தல்**

கடின இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு மேக்ஸ் பிரயன்ட் (29), அணித் தலைவர் ஜேசன் சங்கா (14) விரைவில் திரும்பினர்.

சிவம் மாவி பந்தில் மெர்லோ (38) ஆட்டமிழந்தார். கம்லேஷ் 'வேகத்தில்' முன்னாள் அணித் தலைவர் ஸ்ரீவ் வோ மகன் அஸ்டின் வோ (6), வில் சந்தர்லாந்த் (10) சிக்கினர். ஆரம்ப வீரர் ஜேக் எட்வேர்ட்ஸ் (73) மட்டும் அரைச்சதம் கடந்து, ஆறுதல கொடுத்தார். மற்றைய வீரர்கள் ஏமாற்ற, அவுஸ்திரேலிய அணி 42.5 ஓவர்களில் 228 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.



இந்தியா சார்பில் அதிகபட்சமாக சிவம், கம்லேஷ் தலா 3 வக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

**வல்லியர்ஸ் சாதனை சமன**

லின்கனில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் தென்னாபிரிக்கா, கென்யா அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னா பிரிக்க அணிக்கு அணித் தலைவர் ரெய்னார்ட் டான்டர் மிரட்டினார். இவர் 121 பந்துகளில் 143 ஓட்டங்கள் விளாசினார்.

இதன்மூலம், 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில், ஒரு இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்த தென்னாபிரிக்க வீரர்கள் பட்டியலல் 3ஆவது இடத்தை டி வில்லியர்சுடன் (143 ஓட், எதிர் - இங்கிலாந்து, 2003) பகிர்ந்து கொண்டார். முடிவில், தென்னாபிரிக்கா 50 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 341 ஓட்டங்கள் எடுத்தது. பின் களமிறங்கிய கென்யா, 50 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்கள் மட்டும் எடுத்து, 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

'டி' பிரிவு லீக் போட்டியில் இலங்கை அணி (208/3) 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அயர்லாந்தை (207/8) வீழ்த்தியது.



சதமடித்த தனஞ்செய லக்ஸ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் மகிந்த அணியினருடன் இணைவு

## வலுவடையும் கூட்டு எதிரணி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கத்துவம் வகித்து வந்த இரு முக்கியஸ்தர்கள் அக்கட்சியில் இருந்து பிரிந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணிப் பக்கம் இணைந்து கொண்டுள்ளனர்.

சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் மஹீபால ஹேரத் மற்றும் சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர ஆகியோரே நேற்று முன்தினம் சனிக்கிழமை கேகாலையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் கூட்டத்தின் போது மகிந்த அணி பக்கம் இணைந்துள்ளனர்.



குறித்த கூட்டத்தின்போது கருத்து தெரிவித்த ஹேரத் "தற்போதைய அரசாங்கம் போன்ற முறைகேடான அரசாங்கம் வரலாற்றில் காணப்படவே இல்லை. இந்த அரசாங்கத்தை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். மகிந்தவிற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

அதேசமயம், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் மகிந்தவுடன் தற்போது இணைந்திருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள் அற்ற சிலர் மைத்திரியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்

### கந்தர் கந்தையா வன்னியசிங்கம் (சாரதி)



பிறப்பு: 1948.10.17
இறப்பு: 2018.01.12

இராசவீதி தோப்பு அச்சுவேலி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் கந்தையா வன்னியசிங்கம் 2018.01.12 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் நேசரத்தினத்தினம் தம்பதிகளின் மருமகனும் துளசிமணி தேவியின் (அச்சுவேலி மேற்கு மாதர் சங்கத் தலைவி) மனைவியும் வசந்தகுமார் (சாரதி), வசந்தராஜா (சாரதி), வசந்தலதா (ஜேர்மனி) வசந்தரூபன் (அரசபணிமனை சாரதி), வசந்தகுமாரி (லண்டன்), ஜெயபாஸ்கரன் (சாரதி) ஆகியோரின் தந்தையும் மதிவாணன், ராஜஸ்ரீலன், தேவிகா, சர்மிளா, யசோதகுமாரி ஆகியோரின் மாமனாரும் கந்தையா கனகரத்தினம், பஞ்சலிங்கம் பத்மாவதி, கணேசலிங்கம் சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் ஜெயச்சந்திரன் சறோஜினிதேவி, காலஞ்சென்றவரான நாகலிங்கம் நேசலிங்கம் மற்றும் நாகலிங்கம் சந்திரலிங்கம் (சாரதி), காலஞ் சென்றவரான நாகலிங்கம் ஆனந்தலிங்கம் (சாரதி), நாகலிங்கம் சேகரலிங்கம், சிற்றம்பலம் நேசமணிதேவி, குலேந்திரன் நவமணி தேவி ஆகியோரின் மைத்துனரும் சோபனஸ்ரீ , கிருஸ்ணகுமார், காண்டீபன் ஆகியோரின் சித்தப்பாவும் சஞ்சீவன் , சாலினி, சுகந்தினி, கிருஷாந்தினி, சுகந்தன், கௌசிகா, கௌரீசன், கஜானா, கரீஸ் ஆகியோரின் மாமனாரும் கிருத்திகா, ஏகதர்ஷன், பலராம், டனுஷன், டர்ஷனா, கிருஷனா ஆகியோரின் பெரியப்பாவும் மதுரா, தனுஸ், மாதுரி, ஜனனி, அஜித்குமார், தனுரிகா, தர்மிஷன், யர்ஷா, டக்சிகன், நிலோஜன், தருண் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.01.2018 இன்று திங்கட்கிழமை அச்சுவேலி தோப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-1221)

இராசவீதி. தோப்பு,
அச்சுவேலி மேற்கு

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்


திருமதி. சரஸ்வதி சுந்தரலிங்கம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. இராசநிதி லோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார் சரஸ்வதி சுந்தரலிங்கம் அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

(2393)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 1945-02-23 மறைவு 2017-12-18

அமரர்.

### சிதம்பரப்பிள்ளை பத்மநாதன்

(உரிமையாளர் கனன் போட்டோ கொப்பி சேவிஸ், கனன் புத்தக நிலையம்)

கடந்த 18.12.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் **அமரர். சிதம்பரப்பிள்ளை பத்மநாதன்** (உரிமையாளர் கனன் போட்டோ கொப்பி சேவிஸ், கனன் புத்தக நிலையம்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.01.2018 செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெறும். அந் நிகழ்விலும் மறுநாள் 17.01.2018 புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். சபிண்டீகரணக் கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மணல் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை

குடும்பத்தினர்.

## இராசி பலன்

15.01.2018
தை 02, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 06.33 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 6.19 மணிவரை
மூலம் பிற்பகல் 5.49 மணிவரை
சுபநேரம் 12.34-2.04 மணிவரை
இராகுகாலம் 8.04-9.34 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை | | ராகு |
| கேது சூரி சுக் | சந்திராஷ்டமம் ரோகிணி, மிருகசீரிடம் | | |
| புத சந் | | குரு, செவ் | |

**மீனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மேடம்:** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், ஆன்றோரின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகமாகலாம், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்:** சச்சரவையிட்டு சாதித்து காட்டுவீர்கள், தொலைபேசிவழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், வரவேண்டிய பாக்கிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணத்தால் பலனுண்டு, காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகள் ஏற்படலாம். சிறுசிறு மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், பிள்ளைகளில் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது. ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் மூலம் சுப தகவல்கள் வந்து சேரும், தொழில் நலனில் கூடிய கவனம் செலுத்துவீர்கள்.

**துலாம்:** சமூகத்தார் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோவிலில் பொங்கல் தின சூரிய உற்சவம் நேற்றுக் காலை இடம் பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

# இராணுவத்தினரின் தைப்பொங்கல்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அமிர்த கழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுக்காலை தைத் திருநாள் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த விசேட பூஜை வழிப்பாடுகள் கிழக்கு மாகாண இராணுவத் தலைமையகத்தின் 'ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து ஆலய முன்றலில் இராணுவத்தினரின் விசேட நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

இனங்களிடையே நல்லுறவினையும் படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவினை ஏற்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் தம்மிக்க பனேவல உட்பட கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களின் கட்டளை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# விமலின் உறுப்பினர் சு.கவில் இணைந்தார்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிரேமலால் பொன்சேகா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார். (இ)



# இல்லமெய்வல்லுநர் போட்டி


(யாழ்ப்பாணம்)

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்திறனாய்வுபோட்டி எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் ஜெயரூபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினராக கைதடி வடக்கு கிராம உத்தியோகத்தர் கி.சதீஸன் மற்றும் ஆச்சிபூட் சென்ரர் தொழிலதிபர் எஸ்.நவநீதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)



நல்லிணக்கபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் திருக்குடும்ப கன்னியர் மட அருட்சகோதரிகளின் ஏற்பாட்டில் பொங்கல் விழாவும் விளையாட்டுப் போட்டிகளும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது... (படங்கள்:-இளவாலை செய்தியாளர்)



பலாலி மற்றும் வளலாயில் வசித்து வரும் மாணவர்களின் கல்வியை முன்னேற்றும் முகமாக கருணை உள்ளம் சமூக சேவை அமைப்பினால் மாலை நேர கல்வி நிலையம் ஒன்று கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. அச்சுவேலி பங்குத்தந்தை ஜெயக்குமார் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், அச்சுவேலி உதவி பங்குத்தந்தை, அருட்சகோதரிகள்,அரச அதிகாரிகள், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், கருணை உள்ள சமூக சேவை அமைப்பின் உறுப்பினர்கள், பலாலி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க நிர்வாகத்தினர் ,வளலாய் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க நிர்வாகத்தினர், அந்தோனியார் ஆலய நிர்வாகத்தினர், தாய்மார் கழக நிர்வாகத்தினர், இளைஞர் மன்றத்தினர், விண்மீன் விளையாட்டு கழகத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய குற்றங்களை சட்டரீதியாக தண்டிப்பதில் இலங்கை தோல்வி

(கொழும்பு)

வரலாற்றை நோக்குமிடத்து பாரிய அட்டூழியங்களான குற்றங்களை சட்டரீதியாக தண்டிப்பதில் இலங்கை தோல்வியைக் கண்டுள்ளது என சட்டத்தரணி நிரான் அங்கிற்றல் தெரிவித்தார்.

நிலைமாறு காலத்தில் நீதி என்ற தொனிப்பொருளில் கொழும்பிலுள்ள இனத்துவ ஆய்வுகளுக்கான கற்கைநிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உண்மை ஆணைக்குழு என்ற எண்ணக் கருவானது இலங்கையைப் பொறுத்தவரையில் மிகவும் அந்நியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து நாம் அதிருப்தி கொண்டிருந்தாலும் கஷ்டமான சூழ்நிலையிலும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக நாம் தொடர்ந்தும் போராட வேண்டும் என அங்கு பேசிய மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து குறிப்பிட்டார்.

குறித்த கருத்தரங்கை சட்டக் கற்கைகளுக்கான தெற்காசிய ஆய்வுநிலையம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்றத்தில் மோதல்; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

## சபாநாயகரிடம் சு.க. அமைச்சர் துமிந்த



(கொழும்பு)

அண்மையில் நாடாளுமன்றத்தில் குழப்பம் ஏற்படுத்தியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் தெரிவித்தார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் மிகவும் இழிவான முறையில் உறுப்பினர்கள் நடந்து கொண்டு மோதிக் கொண்டனர் எனக் குறிப்பிட்ட அவர் இந்தச் செயல் கண்டிக்கத்தக்கது எனவும் தெரிவித்தார்.

பிரதேச அரசியல்வாதிகளை நல்வழிப்படுத்த வேண்டும் என்றால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளவேண்டும் எனவும் துமிந்த சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# மின்சார வேலியை உடைத்துக் கொண்டு வீதிக்கு வந்த யானை



(கொழும்பு)

புத்தளம்- செல்லங்கந்தல் காட்டிலுள்ள யானையொன்று நேற்றுக் காலை புத்தளம்-அநுராதபுரம் வீதியின் 4ஆம் இலக்க மைல்கல்லுக்கு அருகில் உள்ள மின்சார வேலியை உடைத்துக் கொண்டு வீதிக்கு வந்துள்ளது.

குறித்த யானை தந்தங்களை பயன்படுத்தி மின்சார வேலியை உடைப்பதாக புத்தளம் வனஜீராசிகள் திணைக்கள உதவி பணிப்பாளர் டபிள்யு.கே.எம்.எஸ். சந்தரரத்ன தெரிவித்தார்.

காட்டை விட்டு வெளியே வந்துள்ள யானையை காட்டுக்குள் துரத்துவதற்காக வனஜீவராசிகள் அதிகாரிகள் குழு ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)






# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-06, ஈச்சமோட்டை வீதி, ஆதன இல 52/3 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மயில்வாகனமும் பெண் நாகரத்தினமும் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இல 53/3, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகஸ்தூரி ஜெயராசா செல்வலிங்கமும் பெண் திலகவதியும்(மயில்வாகனம் மகள்) 2010.09.05 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.வீரகத்திப்பிள்ளை முகதாவில் 10370 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய வெளிப்படுத்தல் உறுதியில் "சதக்கல் வயல்' என்னும் பெயருடைய நில.பர 2 விஸ்தீரணம் உடைய ஆதனம் ஆதியில் தர்மலிங்கம் நடராசாவுக்கும் பெண் நல்லம்மாவுக்கும் உரித்தாக இருந்ததென்றும் அவர்களிடமிருந்து மேற்குறித்த திலகவதியின் பெற்றோரான பொன்னையா மயில்வாகனமும் பெண் நாகரத்தினமும் 1969ஆம் ஆண்டு கொள்வனவு செய்து பின்னர் திலகவதியான தமக்கு 1976 ஆம் ஆண்டு வைகாசி மாதம் சு.செ.மகாதேவா முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீதன உறுதி மூலம் சீதனமாக வழங்கியிருந்தார்கள் என்றும் குறித்த உறுதியானது 1995 இடப்பெயர்வின் போது கை தவற விட்டுவிட்டதாகவும் காணிப் பதிவகத்தில் பெறுவதற்கு முயற்சி செய்தும் கிடைக்கவில்லை என்றும் வெளிப்படுத்தியுள்ளதை பின்னர் 13/02/2017 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 10462 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதி மூலம் குறித்த ஜெயராசா செல்வலிங்கமும் பெண் திலகவதியும் ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் சைமனும் பெண் கிறிஸ்ரீனா செல்வதியும் ஆகியோருக்கு அறுதியாக விற்றுள்ளனர்.

ஆதன விபரம்: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "சதக்கவயல்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராசா அவர்களின் வரைபட இலக்கம் 2967/2010.09.05 இல் துண்டு-1 எனக் காட்டப்பட்ட நில.பர 2 குளி 00 ஆகும். இதன் எல்லை

கிழக்கு: வாய்க்கால்

வடக்கு: பாலசுப்பிரமணியம் பெண் தயாநிதியின் ஆதனம்

மேற்கு: ஒழுங்கை

தெற்கு: தர்மலிங்கம் பெண் மகேஸ்வரியின் ஆதனம்.

தற்போது அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் சைமனும் பெண் செல்வதியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் சைமனும் பெண் செல்வதியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-1218)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:18 செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8169

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/கட்டார்
தொ.இ: B/8170

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:O/L/பிரான்ஸ்
தொ.இ: B/8172

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 45 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்A/L/தனியார்தொழில்
தொ.இ: B/8174

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: GAQ/தனியார் தொழில்
தொ.இ: G/6483

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L/ சொந்ததொழில்
தொ.இ: G/6485

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 4'5"
தகைமை/தொழில்: BSc IT
தொ.இ: G/6486

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA/ஆசிரியர்
தொ.இ: G/6491

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சிப் பகுதியில் தடைசெய்யப்பட்ட கத்தியைஉடைமையில் வைத்திருந்ததுடன், மதுபோதையில் பொது இடத்தில் அசௌகரியம் விளைவித்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு பேருக்கு தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், 14 நாட்கள் கட்டாயச் சிறைத்தண்டனை அல்லது ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் தடைசெய்யப்பட்ட கத்தியை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் மதுபோதையில் பொது இடத்தில் அசௌகரியம் விளைவித்தமை தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு பேருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டு கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், 14 நாட்கள் கட்டாயச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் அல்லது ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் கட்டளையிடப்பட்டுள்ளது.

**************

கிளிநொச்சிப்பகுதியில் இரண்டாவது தடவையாக மனைவியை தாக்கிய கணவனை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் மனைவியைத் தாக்கியமை தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் மீளவும் மனைவியை தாக்கிக் காயம் விளைவித்தமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டையடுத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வழக்குப்பதிவு நபரை கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 24ஆம்திகதி வரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

**************

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் பொது இடத்தில் அசௌகரியம் விளைவித்தவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் மதுபோதையில் பொது இடத்தில் அசௌகரியம் விளைவித்த ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த முழங்காவில் பொலிஸார் குறித்த நபரை கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**************

கிளிநொச்சி வன்னேரிக்குளம் அரச காட்டிற்குள் அத்துமீறி சென்று மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவருக்கும் தலா பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வன்னேரிக்குளம் காட்டுப்பகுதிக்குள் அனுமதியின்றி அத்துமீறிச்சென்று மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவரைக் கைது செய்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த மூவரையும் கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

**************

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் 375 மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் 375 மில்லி லீற்றர் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த நபரை கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

**************

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனாங்ளில் மணல் ஏற்றிய மூன்று பேருக்கு ஒரு இலட்சத்து அறுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனங்களில் மணல் ஏற்றிச்சென்ற மூன்று பேரையும் டிப்பர் வாகனங்களையும் கைது செய்து வழக்குப்பதிவு செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த மூவரையும் தனித்தனியாக கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இரண்டு பேருக்கு தலா அறுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், மற்றுமொருவருக்கு நாற்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (2-315)

# கிளிநொச்சியில் அறுவடை செய்யப்படுகின்ற நெல் பெப்ரவரியில் கொள்வனவு செய்யப்படும்

## நெல் சந்தைப்படுத்தும் சபையினர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லை பெப்ரவரி மாதத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அறுவடை செய்யும் நெல்லை சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது அறுவடை செய்கின்ற ஒரு மூடை நெல்லை இரண்டாயிரம் ரூபாவிற்கு தனியாரால் கொள்வனவு செய்யப்ப டுவதாகவும் இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொள்வதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து மாவட்ட விவசாயிகள் சம்மேளனம் மாவட்ட அரச அதிபரை நேரில் சந்தித்து மாவட்டத்தில் அறுவடை செய்யும் நெல்லை கொள்வனவுசெய்யவும்நிர்ணய விலை ஒன்றைப் பெற்றுத்தரக்கோரியும் கலந்துரையாடி யுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தொடர்புகொண்டு வினவிய போது, நெல்லை கொள்வனவு செய்வதற்கான களஞ்சியங்கள் தற்போது உள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து நெல்லை கொள்வனவு செய்யும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்து குறிப்பிட்ட அளவுநெல் கொள்வனவு செய்யப் படவுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது. (2-315)

# தேர்தல் வாக்கெடுப்பு திருத்தச்சட்டங்கள் தொடர்பில் வேட்பாளர்களுடன் கிளிநொச்சியில் கலந்துரையாடல்





(கண்டாவளை)

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் தேர்தல் வாக்கெடுப்பு திருத்தச் சட்டங்கள் தொடர்பில் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

தேர்தல்கள் அமைப்பான கபே அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் அமைந்துள்ள சோலைவனம் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்து ரையாடலில் கபே அமைப் பினுடைய நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென் னக்கோன் கலந்து கொண்டு வேட்பாளர்களுக்கான கருத் துக்களை வழங்கியதுடன், தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பிலும் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி, ஆகிய நான்கு மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். (2-315)






வவுனியா வெளிச்சம் அறக்கட்டளையினர் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து நெடுங்கேணிப் பகுதியில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களான கற்குளம்,ஒலுமடு ஆகிய பிரதேசங்களில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளின் பராமரிப்பு இல்லாமல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஐந்து குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் அவர்களுடைய வீடுகளுக்கு நேரில் சென்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

# வீடமைப்பு சீட்டுக்குலுக்கலில் முல்லையில் ஆறு பேர் தெரிவு

பயனாளிகளுக்கு இடையே மாதாந்தம் நடத்தி வரும் வீடமைப்பு அதிர்ஷ்ட லாபச் சீட்டுக் குலுக்கலில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான அதிர்ஷ்டக் குலுக்கலில் முடிவுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட 6 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இருந்து தலா ஒரு வெற்றியாளர் வீதம் மொத்தம் 6 வெற்றி யாளர்கள் வெற்றிபெற்றுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாது,

நாடு தழுவிய ரீதியில் உள்ள சமுர்த்தி பயனாளிகளிகளுக்கிடையே சமுர்த்தி வீடமைப்பு அதிர்ஷ்டலாபச்சீட்டுக்குலுக்கல் மூலம் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவில் இருந்தும் ஒரு வெற்றியா ளர் வீதம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர் களுக்கு 2 இலட்சம் ரூபா பணப் பரிசினை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வழங்கி வருகின்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் வீடமைப்பு அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கலில் வெற்றியீட்டிய வெற்றியாளர்கள் தமது பரிசுப் பணத்தைப் பயன்படுத்தி தங்கள் பகுதி சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரின் மேற்பார்வையின் கீழ் புதிய வீட்டினை அமைத்தல் அல்லது காணி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம் அல் லது வாழ்வாதாரத்தை வளப் படுத்தும் வகையில் தொழில் முயற்சிகள் ஏற்படுத்திக் கொள்ளலாம் அல்லது வெற்றியாளரின் உயர் கல்வியில் இணை ந்துள்ள பிள்ளைகளின் எதிர்கால கல்வி நடவடிக் கைகளுக்காக பயன்படுதிக் கொள்ள முடியும்.

இதற்கமைய, ஒக்டோபர் மாத அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கலில் மாந்தை கிழக்கு , துணுக்காய் பிரதேச செயலகம், வெலிஓயா பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் ஆகிய பிரதேசங்களில் தலா ஒருவர்வீதம் வெற்றி பெற்றுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# முன்மொழிந்த பொருத்தமான இடங்களில் சூரிய மின்கல விளக்குகள் பொருத்தம்

## கரைச்சி பிரதேசசபை செயலாளர் கம்சநாதன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் முன் மொழிந்த இடங்களிலேயே சூரிய மின்கல விளக்குகள் பொருத்தப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள பகுதிகளில் வீதி மின் விளக்குகளை பொருத்துமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபைக்குட்பட்ட அக்கராயன் பிரதேசத்தின் முக்கியமான இடங்களில் வீதி விளக்குகளை பொருத்துமாறு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் இப்பகுதியில் சூரிய மின்கல விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்சநாதனிடம் வினவிய போது, அக்கராயன் பிரதேசத்தில் பொது மக்கள் அதிகம் பயன்படுத்துகின்ற மக்கள் கூடுகின்ற இடங்களில் மின் விளக்குகளை பொருத்துமாறு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

அதற்கமைய கடந்த ஆண்டில் அதற்கான நிதி கிடைக்கப்பெற்றநிலையில் அக்கராயன் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம மட்ட அமைப்புக்கள், கிராம அலுவலர்கள், பிரதேச செயலர் மற்றும்கிராம மக்களால் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட இடங்களில் குறித்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

இதற்கான கேள்வி கோரல்கள் ஏற்கனவே பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படாமை குறிப்பிடத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் பிரசாரங்களை நடத்த அனுமதிக்கக்கூடாது

# பொதுச்சந்தை வர்த்தகர்கள் அல்லாத பலர் கையொப்பமிட்டு கடிதம் அனுப்பி வைப்பு

## கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்த அனுமதிக்க கூடாது என தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் உள்ளிட்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் பொதுச் சந்தையில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் அல்லாத பலர் கையொப்பமிட்டு பிரதிகளை அனுப்பியுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் அரசியல் கட்சிகள் உள்ளுராட்சித்தேர்தல்கூட்டங்களை நடத்த அனுமதிக்கக்கூடாது என 52 பேர் வரையானவர்கள் கையொப்பமிட்ட கடிதத்தின் பிரதிகளை கரைச்சி பிரதேச சபை மற்றும் தேர்தல்கள் ஆணையாளர், மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த கடிதம் தொடர்பில் பரிசீலனை மேற்கொண்டு வருவதாக ஏற்கனவே கரைச்சிப்பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்த நிலையில் இவ்விடயம் தொடர்பில் நேற்று வினவிய போது,

தேர்தல் பிரசார கூட்டங்களுக்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ பொது இடங்களை கோருகின்ற போது, அதனை வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேச சபைகளாகிய எங்களுக்கு உள்ளது. அந்த வகையில் எந்த அரசியல் கட்சிகள் கேட்டாலும் அதனை வழங்க வேண்டியுள்ளது.

இது எமது கடமை. ஆனால் ஒருவருக்கு அனுமதி வழங்கி மற்றவர்களுக்கு வழங்காமல் விடவில்லை. இதுதொடர்பில் தேர்தல் தொடர்பான கூட்டங்களிலும் தெரியப்படுத்தியிருக்கின்றோம் என குறிப்பிட்ட அவர் கிளிநொச்சி பொதுச்சந்தையில் தற்போது 320 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் தினமும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் 52 வரையான வர்த்தகர்களின் பெயர் குறிப் பிடப்பட்டு கையொப்பங்கள் பெறப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் தொடர்பில்சந்தை வர்த்தகர்களிடம் எமது உத்தியோகத்தர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டதன்படி 13 வரையான வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு உரிமையாளர்களின் பெயருக்கு பதிலாக பிறிதொரு நபர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் 9 வரையான வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உரிய விளக்கங்கள் குறிப்பிடப்படாது வேறு விடயங்களை கூறி கையொப்பங்களை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (2-315)




## தென்னை பயிர்ச்செய்கை சபையின்

# சமூக நலன் வேலைத்திட்டமும் காசோலை வழங்கும் நிகழ்வும்

(முல்லைத்தீவு)

தென்னை பயிர்ச்செய்கை சபையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2017 வருடத்திற்குரிய மானியத்திட்டங்களிற்கான காசோலை வழங்கும் நிகழ்வும் சமூகநலன் சார்ந்த வேலைத்திட்டமும் கடந்த 11ஆம் திகதி முள்ளியவளையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 650 பயனாளிகளிற்கு நீர்ப்பாசனம், மாட்டுத்தொழுவம், தென்னை நடுகைக்குழி, சேதன, அசேதன பசளை போன்ற பல வேலைத் திட்டங்களிற்குரிய மானியங்களிற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தேவைகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.வில்வராஜா, கற்பகதரு சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





அத்துடன் அநுராதபுரம் பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணரின் பங்குபற்றுதலுடன் கூடிய சிறுநீரக பிரச்சினைகள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வும் நடைபெற்றது. (2)

## வெளிநாட்டு வேலைத்திட்டத்திற்கு

# இளைஞர், யுவதிகளை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை

(பனிக்கன்குளம்)

வெளிநாட்டு வேலைத் திட்டத்திற்காக இளைஞர்-யுவதிகளை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை - 2018 நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் வெளிநாட்டு வேலைத்திட்டத்திற்காக இளைஞர் கழக துறையில் ஈடுபட்டு செயற்பாடுடைய இளைஞர்,யுவதிகளை பங்கு கொள்ளச் செய்யும் நோக்குடன் இந்நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் இளைஞர்,யுவதிகளை தெரிவு செய்யும் நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற A9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட காரியாலயத்தில் நடைபெற இருப்பதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி சரோஜா குகநேசதாசன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் கழக செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர்,யுவதிகளை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் இந் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்பவர்களின் அடிப்படைத் தகைமைகள் வருமாறு,

ஆகக் குறைந்தது இளைஞர் கழகத் துறையில் 3 வருட செயற்பாட்டாளராக ஈடுபட்டிருத்தல், 2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் விண்ணப்பதாரிகளாக இருத்தல், யூத் வித் ரலன்ட் வேலைத்திட்டத்திற்கு சிறந்த கருத்திட்டத்தினை செயற்படுத்திய இளைஞர் கழகத்தின் அங்கத்தவராக இருத்தல், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலமாக இதற்கு முன்பு வெளிநாட்டு பயணங்களுக்கு பங்குபற்றாதிருத்தல், வேறு தொண்டர் அமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல், கலாசாரம் மற்றும் விளையாட்டு திறமைகள் பற்றிய ஆற்றல் என்பனவாகும்.

அத்தோடு கடந்த வருடங்களில் இவ்வாறு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்பட்டமேற்பட்ட இளைஞர், யுவதிகள் வட இந்தியா, தென் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ் ஜோர்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு சென்றுவந்துள்ளனர். இவர்களுடன் எமது மாவட்டத்தின் 4 உத்தியோகத்தர்களும் சென்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வவுனியாவில் வேட்பாளர் மீது தாக்குதல்; இருவர் கைது

(குருமன்காடு)

நடைபெறவுள்ள உள்ளுராட்சிமன்ற தேர்தலில் வவுனியா நெளுக்குளம் தமிழ் தெற்கு பிரதேசசபை சார்பாக போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நெளுக்குளம் வேட்பாளர் ஒருவர் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறு விபத்து இடம் பெற்றிருந்தது. விபத்தில் சிறுவன் ஒருவன் சிறு காயத்திற்குள்ளாகியிருந்தான். அவருடன் கதைத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நெளுக்குளம் வேட்பாளரான குகராசா மயூரன் என்பவர் மீது இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற நெளுக்குளம் பொலிஸார் இருவரை கைது செய்தனர். காயமடைந்தவர்வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)



வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்று தைப்பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றது. இதில் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:-குருமன்காடு செய்தியாளர்)

# திருவள்ளுவர் ஆண்டை வரவேற்கும் நிகழ்வு

(கிளிநொச்சி )

கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் ஆண்டு 2049 ஆம் ஆண்டை வரவேற்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி தமிழ் சங்கத்தால் பிற்பகல் 3 மணிக்கு கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் திருவள்ளுவர் சிலை முன்பாக நடத்தப்படவுள்ளது.

தமிழ் சங்க தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் நடைபெற உள்ள இந் நிகழ்வில் கிளிநொச்சி தமிழ் சங்கத்திற்கு மிக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக குழு உறுப்பினர்கள் பதவிப் பிர்மாணம் செய்ய உள்ளனர். (2)

## பயிற்சிப்பட்டறை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள நெலும் பியச கேட்போர் கூடத்தில் இலங்கை கயிறு இழுத்தல் சங்கத்தின் ஒருநாள் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள இலங்கைப் பாதுகாப்புப்படைகளின் கேட்போர் கூடமான நெலும் பியச கட்டடத்தில் பயிற்சிப்பட்டறை படையினரின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

இதில் இலங்கை இராணுவத்தின் 57வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி ஜெனரல் ஜெகத்குணவர்த்தன மற்றும் கயிறு இழுத்தல் சங்கத்தின் தலைவர் கேணல் ஆர்.ஏ.கே.ஆர். ரணசிங்க வடக்கு மத்திய குழுவைச் சேர்ந்த ஆர்.குருவன் மற்றும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். இலங்கை கயிறு இழுத்தல் சங்கத்தில் அங்கம் வகிக்கின்ற விளையாட்டுக் கழகங்கள், படையினர் இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடுகை செய்யும் வேலைத்திட்டம்

## கிளிநொச்சியில் ஆரம்பிப்பு



(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள 66 இராணுவ படைப்பிரிவின் கட்டளைத் தளபதியின் நெறிப்படுத் படுத்தலுடனும் மற்றும் பூநகரி பிரதேச செயலகம், பூநகரி பிரதேச சபை, வன பரிபாலனத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரிவு, கரைச்சி பிரதேச சபை ஆகிய பிரிவுகளின் ஒத்துழைப்புடன் இராணுவ வீரர்களினால் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடுகை செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட 66 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள 66 படைப் பிரிவின் கட்டளைத் தளபதியின் உத்தரவுக் கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள படை முகாம்களின் படைவீரர்களால் மருது, கொண்டல், சமண்டலை, வேம்பு, மலை வேம்பு உட்பட பயன் மிக்க மரங்களின் வித்துக்களை பைகளில் விதையிட்டு சுமார் ஒரு இலட்சம் மரக் கன்றுகளை உற்பத்தி செய்துள்ளனர்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மரக்கன்றுகளை கிளிநொச்சி மாவட்ட வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் பாடசாலைகள், அரசதிணைக்களங்கள் மற்றும் பொது இடங்களில் நடுகை செய்வதற்காக இலவசமாகவழங்கிவருகின்றனர்.

அத்துடன், இராணுவத்தினர் பிரதான வீதிகளின் ஓரங்களில் நடுகை செய்வதுடன், மரக் கன்றுகளைச் சுற்றி பாதுகாப்பு கூடுகளையும்அமைத்துநீர் ஊற்றி பராமரிப்பு செய்து வருகின்றனர்.

இத் திட்டத்தின் ஒரு கட்டமாக பரந்தன் - கேரதீவு சங்குப்பிட்டி ஊடான யாழ்ப்பாணம்செல்லும் வீதியில் உள்ள பூநகரி பள்ளிக்குடாவில் இருந்து பரந்தன் சந்தி வரையான வீதியின் இரு மருங்கிலும்சுமார் ஆயிரம் மருத மரக் கன்றுகளை நடுகை செய்யும் வேலைகள் கடந்த 12 ஆம்திகதி வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள் -2018



நல்லதையே செய்ய வேண்டும் என்று சொல்லும் விருச்சிக இராசி வாசகர்களே!

வந்துவிட்டது புத்தாண்டு! வளர்ச்சி அதிகரிக்கும் விதத்தில் கிரக நிலைகளின் சஞ்சாரம் உள்ளது. வருடத் தொடக்கத்தில் சனி விலகி சந்தோஷ வாய்ப்புகளை சந்திக்க வைக்கிறது. வாக்கு ஸ்தானச் சனியால் இனி நீங்கள் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறப்போகின்றது. திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். வாய்ப்புகள் வந்து அலைமோதும். அனுபவத்தின் வாயிலாக அகிலமெல்லாம் போற்றும் விதம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள்.

வருடத் தொடக்கத்தில் இலாபாதிபதி புதன், ஜென்ம இராசியில் சஞ்சரிக்கிறார். தன ஸ்தானத்தில் சுக்ரன், சனி, சூரியன் ஆகியோர் வீற்றிருக்கின்றனர். குருவின் பார்வை சுக ஸ்தானத்தில் பதிகின்றது. எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். அன்பு நண்பர்களின் ஆதரவோடு இன்பங்களை எல்லாம் வரவழைத்துக் கொள்வீர்கள். 9 ஆம் இடத்து ராகுவால், பொன் பொருள் குவியப் போகிறது. போற்றும் விதத்தில் செல்வாக்கும் உயரப் போகிறது. அதுமட்டுமல்ல, முக்கிய புள்ளிகளில் ஒருவராகவும் திகழப் போகிறீர்கள். மனப் பயம் அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேசப்பற்று மிக்கவர்களும், தெய்வப்பற்று மிக்கவர்களும் தேடிவந்து மாலை சூட்டுவர்.

புத்தாண்டு 2018 இன் கூட்டுத்தொகை '2' என்ற சந்திரனின் ஆதிக்கத்தில் வருகிறது. அந்தச் சந்திரனுடைய வீடு உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமாகும். எனவே ஒளிமயமான எதிர் காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப் போகிறது.

குரு-மங்கல யோகத்தோடும், குரு-சந்திர யோகத்தோடும், குரு-சுக்ர பரிவர்த்தனையோடும் இந்த ஆண்டு பிறப்பதால், திருமகளின் அருளாலே உங்களுக்கு திரளான செல்வம் சேரும். கலைவாணி அருளால் பட்டங்களும், பதவிகளும் கிடைக்கும். பொதுநலத்தில் உள்ளவர்கள் புகழ் ஏணியின் உச்சிக்குச் செல்வர்.

இருப்பினும் உங்களின் சுய ஜாதக கட்டத்தையும், புத்தாண்டு கட்டத்தையும் கொண்டு, பலன் அறிந்து யோக பலம் பெற்ற நாளில், சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்வது யோகங்களை அடுக்கடுக்காக கொண்டு வந்து சேர்க்கும்.

புத்தாண்டின் தொடக்க நிலை!

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 12 ஆம் இடத்தில் தனாதிபதி குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே வரவு திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வீடு கட்டும் அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் அதிகரிக்கும். சென்ற ஆண்டில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். குரு-மங்கல யோகத்தால் கல்யாணக் கனவுகள் நனவாகும்.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களில் பதிவதால், நாள்தோறும் நல்ல தகவல் வந்து கொண்டே இருக்கும். வீடு, இடம் வாங்குவதில் ஆர்வம் கூடும். வீடு, அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். வாகனம் வாங்கும் யோகம் வாய்க்கும். உத்தியோகத்தில் உயர் பதவிகள் கிடைக்கலாம். தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர். பொருளாதார நிலை உயரும். பேட்டி கொடுக்கும் அளவிற்கு பெரிய நிலையை அடையப் போகிறீர்கள்.

இரண்டில் சஞ்சரிக்கும் சனியால் இனிய மகத்தான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். ஆரோக்கியத் தொல்லை அகலும். உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் உடல் நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். தெய்வ பக்தியும், தேசபக்தியும் மிக்க உங்களுக்கு, எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும். கலைத் துறையில் உள்ளவர்கள் கௌரவிக்கப்படுவர். விருதுகளைப் பெற்று வியக்கும் வாழ்வைக் காண்பர்.

குருவின் அதிசார காலமும், வக்ர காலமும்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு விருச்சிக இராசிக்குள் அதிசாரம் பெறுகிறார். 7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை விருச்சிக இராசிக்குள் குரு- செவ்வாய்




துச் செய்வது நல்லது. இந்த காலத்தில் பழனி, வைத்தீஸ்வரன் கோவில், திருப்பாம்புரம், திருநள்ளாறு போன்ற ஸ்தலங்களுக்கு யோகபலம் பெற்றநாளில் சென்று வழிபட்டு வந்தால் மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும்.

வளர்ச்சி தரும் வழிபாடு!

உங்களுக்கு யோகம் தரும் எண்களின் ஆதிக்கத்தில் 'சிவாயநம' என்று எழுதுவது நல்லது. சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாடும், பௌர்ணமி அன்று கிரிவலம் வருவதும் உங்களுக்கு எண்ணற்ற நன்மைகளை வழங்கும். பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

செவ்வாய் பெயர்ச்சியும், உச்சமும்!

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். அவர், ஜனவரி 20ஆம் திகதி முதல் மார்ச் 10ஆம் திகதி வரை விருச்சிகத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது உடல் ஆரோக்கியம் சீராகும். உடன் பிறந்தவர்களால் நன்மை கிடைக்கும். வியாபாரம் விருத்தியடையும். வாங்கிய கடனை திருப்பிக் கொடுப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். உத்தியோகத்தில் நிரந்தரப்பணி கிடைக்கும்.

## ஒன்பதில் இருக்கும் ராகுவினால் பொன் பொருள் குவியும் நேரமிது!

பலன்கள் ஏராளமாக வந்து சேரும். திரண்ட செல்வத்தைக் கொடுக்கும். காரியங்கள் அனைத்தும் விருப்பம் போல் நிறைவேறும்.,

சனியின் பார்வை 4,8,11 ஆகிய இடங்களில் பதிவதால் தள்ளிப்போன வாய்ப்புகள் தானாக வந்து சேரும். துள்ளிச் சென்ற துயரங்கள் ஓடி ஒளியும். தலைமைப் பதவிகளும், பொறுப்புகளும் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் உங்கள் இராசிக்கு யோகம் தரும் விதத்தில் இருக்கிறது. 9 இல் ராகுவும், 3இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். 9இல் ராகு வந்தால் உயரிய வாழ்க்கை உண்டு. எனவே, நீங்கள் எந்தத் தொழில் செய்பவர்களாக இருந்தாலும் அதில் ஏற்றம் கிடைக்கும். வந்த வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்.

குருப்பெயர்ச்சிக் காலம்!

ஆண்டின் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வரும் குரு பகவான், ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். மற்ற இராசிக்காரர்களுக்கும், உங்களுக்கும் சற்று வித்தியாசம் உள்ளது. உங்கள் இராசிக்கு தன பாக்யாதிபதியாக விளங்கும் குரு, உங்கள் இராசியில் வாசம் செய்யும்பொழுது தன பாக்கியத்தை வழங்குவார். வங்கிச்சேமிப்பு வரலாறு காணாத அளவு உயரும். தங்கம், வெள்ளி சேர்க்கை உண்டு. மங்கல காரியங்கள் மனையில் நடைபெறும். அரியணையில் இருப்பவர்களும், அதிகார பதவியில் உள்ளவர்களும் உங்கள் ஆலோசனைகளைக் கேட்க வீடு தேடி வருவர். மற்ற இராசிக்காரர்களுக்கு ஜென்ம குரு வந்தால் இடமாற்றம், வீடுமாற்றம், உத்தியோக மாற்றங்களைக் கொடுக்கும். உங்களைப் பொறுத்தவரை வரும் மாற்றம் வளர்ச்சி தரும் மாற்றமாகவே இருக்கும்.

குருவின் பார்வை 5,7,9 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே மதிநுட்பத்தால் சேர்க்கை ஏற்பட்டு குரு-மங்கல யோகத்தை உருவாக்குகின்றது. இந்த காலத்தில் சுப காரியங்களை நடத்த உகந்த நேரமாகும். வீண் விரயங்களில் இருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

குருவின் அதிசார காலத்திலும், வக்ர காலத்திலும் இனம்புரியாத கவலை மேலோங்கும். இல்லத்தில் உள்ளவர்களால் தொல்லை ஏற்படும். சொன்ன சொல்லை நிறைவேற்றுவதில் தாமதங்கள் ஏற்படலாம். யாரையும் நம்பிச் செயற்பட முடியாது. பொறுப்புகள் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. குருபகவானுக்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் செயற்பாடுகளில் உள்ள தடைகள் அகலும்.

சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20ஆம் திகதிவரை மூல நட்சத்திரக் காலில் தனுசு இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். இக்காலத்தில் சகோதர ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அலைச்சலுக்கு ஏற்ற ஆதாயம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். பணியில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்பச் சுமை கூடும். தன்னம்பிக்கையைத் தளர விடாதீர்கள்.

கல்வி, சுகம், தாய், வீடு, வாகனம் போன்றவற்றைக் குறிக்கும் நான்காம் இடத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால், மறதி அதிகரிக்கும். இடமாற்றங்கள் உறுதியாகலாம். வாகனப் பழுதுகளால் வாட்டம் காண்பீர்கள். ஆரோக்கியத்திற்காக செலவிட நேரும். தாய்வழி ஆதரவு ஓரளவே கிடைக்கும். முயற்சிகளில் வெற்றி பெற அனுமன் வழிபாடு அவசியம். சனி- செவ்வாய் சேர்க்கை காலத்தில் பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. எந்த முயற்சி செய்தாலும் குடும்பப் பெரியவர்களையும், சான்றோர்களையும் ஆலோசித்

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 26ஆம் திகதி வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள் மட்டுமல்ல, அசையா சொத்துகள் வாங்குவதிலும் ஆதாயம் உண்டு. அரசியல் வாதிகளாலும் ஆதாயம் உண்டு. குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். வம்சம் தழைக்க வாரிசுகள் உருவாகும் நேரமிது.

பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!

இந்தப் புத்தாண்டு உங்களுக்குப் புதிய பாதையைப் புலப்படுத்தும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். வாழ்க்கைத் துணையோடு வளைந்து கொடுத்துப் போவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உங்கள் ஆலோசனைகளுக்கு குடும்ப உறுப்பினர்கள் முக்கியத்துவம் கொடுப்பர். வாரிசுகளின் வளர்ச்சி பிரமிக்கத் தக்கதாக அமையும். இதுவரை வந்த வரன்களை விட இனி வரும் வரன்கள் சிறப்பாக அமையும். தாய்வழி ஆதரவு உண்டு. வருமானம் மிதமிஞ்சியதாக இருக்கும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பவர்களுக்கு விருதுகள் கிடைக்கும்.

குருப்பெயர்ச்சிக்குப் பின் ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். ஆனைமுகப்பெருமான், ஆறுமுகப் பெருமான், அனுமன் வழிபாட்டையும், குலதெய்வ வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். (தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவின் பெருமை

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பசுக்கள் வாழ்க என்று பாடியருளியவர். பசு சாதுவான பிராணி. அது பால் சுரந்து எம்மை வளர்ப்பது. பெற்ற தாய் பால் ஊட்டிய பின் பசுவே பால் சுரந்து ஊட்டுவதால்அதுகோமாதா. சைவர் பசுவை தெய்வமாகப் பூசிப்பர். தமிழ் வீரர் பசுவுக்குத் தீமை உண்டாகாமற் போர் செய்வர். பசுக்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொடுப்பதிற் பகை அரசரும் உடன்பாடு தெரிவிப்பர்.


பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், கோசலம் என்னும் ஐந்தும் பஞ்சகௌவியம். இவை அபிடேகத்திற்குரிய புனிதமான திரவியங்கள், பசு காத்தல் பெரிய அறம்.பசு இனத்தில்நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாகக் கொடுத்தல் கோதானம் எனப் பெருமை பெற்றது.

பசுவின் உயர்வு கருதியே சைவ சித்தாந்தம் ஆன்மாக்களைப் பசு எனக் கூறுகிறது. பசுக்களுக்கு தலைவர் என்ற முறையில் சிவபெருமான் பசுபதி எனத் திருநாமம் பெற்றார். சைவசமயத்தின் முதல் நூலாகிய வேதத்திற்கும் பசு என்னும் பெயரும் உண்டு.

பசுக்களுக்குத் துன்பம் வராமற் காத்தவருள் விசாரசருமர் என்னும் சண்டேசுர நாயனார், ஆனாயனார், திருமூல நாயனார் முதலானோர் மிகப் பெரியவர்கள். சைவ நெறியில் விதிக்கப்பெற்ற எண்வகையான ஸ்நானங்களுள் மாருத ஸ்நானம் என்பதும் ஒன்று. பசுவின் காலில் பட்ட தூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப் பூசுதல் ஆக்கிநேயஸ்நானம் எனப் பெறும். திருக்கோயிலில் கிடைக்கும் பெரும் பிரசாதமாய் திருநீறு பூசுதல் பார்த்திபஸ்நானம் என்பதாகும்.

பசுவை மாடு என்றும் ஆ என்றும் கோ என்றும் தேனு என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப் பெயரிட்டு அழைப்பர். கறுப்பி, சிவப்பி, வெள்ளைச்சி, மறைச்சி, நரைச்சி என்பன எல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்கள்.

## இன்று பட்டிப் பொங்கல்



பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி, இல்லாவாம் என்றும் பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்க மாட்டாள் என்றும் பசு இல்லாத நாடு காட்டுக்கு சமமாகும் என்றும் பாடுவர்.

ஆவிலா மனையகம் அழகு குன்றுமே

ஆவிலா மனையகம் ஆக்கம் இல்லையாம்

ஆவிலா மனையகம் அமலை நீங்குவாள்

ஆவிலா நாடெலாம் அடவி யாகுமே

இச் செய்திகளை எல்லாம் ஈழத்துச் சிதம்பர புராணமுடையார் நவாலியூர் சோ. இளமுருகனார் அண்மையில் அழகாகக் கூறியுள்ளார்.

ஆவினைப் பிள்ளைபோல் அருத்திப் பேணுவர்

ஆவினைப் பெயர்குறித் தழைப்ப ராத்தரு

சேவினைச் சிறப்புற வளர்ப்பர் நெய்களில்

மேவிய பணியெலாம் விரும்பிச் செய்யவே.

பசுவின் உறுப்புக்களெங்கும் தேவர்கள் முதலான பெரியவர்கள் வதிகிறார்கள் என்பதால் பசு புண்ணியப் பிறவி என்பதோடு புனிதமானதும் வழிபாட்டுக்குரியதுமாம் என்னும் கருத்தையும் அழகுறப்பாடுவார்.

ஆக்களி னுறுப்பெலாம் அமரர் வைகுவார்

ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்

ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற்(று)

ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்

பசுவின் தலை உச்சியிற் சிவனும் நெற்றியிற் சக்தியும் மூக்கு நுனியில் முருகனும் கொம்புகளிற் பிரமாவும் விஷ்ணுவும் கண்களிற் சூரியனும் சந்திரனும் இன்னும் இன்னும் இதுஉறுப்புகளில்ஏனைய தெய்வ மூர்த்தங்களும் இருப்பர் என்ப.

இங்ஙனமாக எங்கள் வாழ்வில் பசுமைப்புரட்சிக்கான வழியில் உதவி யாக நிலவி வரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைப் பொங் கல் இடுபவராயநாம்.

அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் புரிந்து வெண்மைப் புரட்சிக்கு வழியா கவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகின்றோம்.

இன்னும் சைவசமயத்தின் பிரமாண நூல்களுள் ஒன்றாய வேதத்தில் முதற் பகுதியாயுள்ள இருக்கு வேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர் அதற்கு எவரும் தீங்கு செய்தல் ஆகாது என்றும் அது உருத்திரனின் அன்னை வசுக்களின்பிள்ளை அமுதத்தின் மையம் ஆதித்தியனின் சகோதரி அனைவருக்கும் அதிதி பாவம் அறியாத பிராணி என்றெல்லாம் அறியத்தருவர்.

இனி சாமவேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன. "நீவிர் புண்ணியமானவர்கள். நீங்கள் நன்றாக வாழுங்கள். நன்றாகப் பாலைப் பொழியுங்கள். காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கேயுள்ள நீர் நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகுக. நீவிர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக! வளம் பெருக்குவீராக

இன்புடைத் தைமதிப் பிறப்பி லேழ்பரி

வன்புடைத் தேரவற் போற்றி மற்றைநாட்

பொன்பெறு புதல்வரிற் புரியு மாக்களுக்(கு)

அன்பினாற் பொங்கலும் அமை யச் செய்வரால்

இனிப்பசுவினைக் கொன்று தின்னும் பரதேசப்பழக்கம் வெளிநாட்டு வனாந்தர வாசிகளாலும் பறங்கியராலும் இங்கே ஒரு காலத்தில் வந்த தென்றும் அது புனிதமான சைவ நெறிக்கு ஒவ்வாத செயல் என்றும் அதனை உண்ணாதவர் தேவரா வர் என்றும் பாடுவர்.

ஆவினைக் கொல்லுதல் அவ் வூன் உண்ணுதல்

பாவிகள் தொழிலவை சைவப் பண்பல

மேவிய நிரயத்து வீழ்த்தி மாய்க்குமத்

தீவினை யொழித்தவர் தேவ ராவரே

மத்திய காலச் சிங்கள மக்கள் வரலாற்றில் பசுமாடு பெரு மதிப்புப் பெற்றிருந்தது. ஜெய வர்த்தனபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு வீற்றிருந்த மாமன்னன் ஆறாம் பராக்கிர மபாகு என்பானின் காலத்தில் அரண்மனை வாசலில் காலை வேளையில் சாணித் தண்ணீர் தெளிக்கும் தமிழ்க் கலாசாரம் நிலவியது. பசுமாடு புனிதமான பிராணியாக கருதப் பெற்று வந்தது. அதனை எவரும் துன்புறுத்த லாகாது என்னும் எழுதாவிதி நிலவி யது. அன்றி பசுமாடு நோய் வாய்ப் பட்டு இறந்தால்அதைப் பக்தியுடன் நிலத்தில் புதைக்கும் வழக்கம் நிலவியது.

சிங்கள மக்கள் எவ்வாறாயினும் மாட்டிறைச்சி உண்டதில்லை என்று மஹாவன் (Mahavan) என்பார் 1413 ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். பிற்காலத்தில் பறங்கியர் இலங்கைக் கரை நாடுகளில் செல் வாக்குற்று மாட்டிறைச்சி உண்டு வந்ததைக் கண்ட சிங்கள மக்கள் அப்பறங்கியரை அடிமைப் பறங்கியர் என அழைத்தார்கள் என்று ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் எழுதியுள்ளார்கள்.

பல்கலைப்புலவர்
க.சி.குலரத்தினம்

# சகல தகவல்களையும் வெளியிடப் போவதாக இராஜாங்க அமைச்சர் சுஜீவ எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நடந்த மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பான சகல தகவல்களையும் வெளியிடப் போவதாக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க எச்சரித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தில் நடந்த பிணை முறிப்பத்திர கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி மறைத்து வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளர்.

மகிந்த ராஜபக்ஷவும், மைத்திரிபால சிறிசேனவும் அங்கம் வகித்த கடந்த அரசாங்கம் 2008ஆம் ஆண்டு எவ்வித அனுமதியும் இன்றி 4,000 பில்லியன் ரூபாவை கொள்ளையிட அனுமதிவழங்கியது. இதுதான் உண்மை. இதனை எதிர்காலத்தில் வெளியிடுவேன்.

எமக்கு சேறுபூச ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடாது ஒழித்து வைத்துள்ளார். அப்பாவி என்பதால், ரணில் விக்கிரமசிங்க விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பெறப்போகும் வெற் றியை தடுக்கும் நோக்கில் இந்த குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர் எனவும் சுஜீவ சேனசிங்க கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# பிரதமரை சட்டத்தின் முன்பாக உடன் கொண்டுவர வேண்டும் சுமங்கல தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி ஊழலுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக சட்டத்தின் முன்னிலைக்கு கொண்டு வரவேண்டும் என ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகம் ஒன்றுக்கு கருத்து வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து வெளியிடுகையில்,

கடந்த காலத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் நியமிக்கப்பட்டது ஊழல் செய்வதற்காகவே என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. இதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே மூலகாரணம்என்பதும், அவர் மத்திய வங்கி ஊழலுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளார் என்பதும் வெளிப்படுத்தப்பட்டு விட்டது.

தற்போதைய நிலையில் [illegible] குறித்த [illegible] முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை மட்டும் குற்றவாளியாக்க நல்லாட்சி அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இந்த விடயத்தில் இன்னும் அர்ஜுன் மகேந்திரன் கைது செய்யப்படாமல் இருப்பது நாட்டின் நீதி செயற்பாடுகள் மீது வெட்கத்தை ஏற்படுத்துகின்றது.

மற்றொரு பக்கம் ஊழல் திருடர்களான கூட்டு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு பிரதமர் மீது குற்றச் சாட்டுகளை முன்வைக்க எந்தவித தகுதியும் இல்லை. காரணம்அவர்களும்ஊழல்வாதிகளே என சுமங்கல தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சவுதி சிறைச்சாலைகளில் 200 இலங்கையர்கள்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்தவர்கள் 200 பேர் சவுதி சிறைகளில் சிறை வைக்கப்பட்டுள்ளதாக சவுதிக்கான இலங்கைத் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்குதல் மற்றும் அவர்களது நிலை தொடர்பில் ஆராய்வதற்காக தூதரகம் நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளதாக சவுதியின் இலங்கைக்கான தூதுவர் அஷ்மி தாசிமின் தெரிவித்தார்.

குறித்த இலங்கையர்கள் சவுதியின் சட்டதிட்டங்களை மீறியமை, மதுபானம், ஒழுக்கமற்ற முறையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட விடயங்களுக்காகவே இவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளதாக சவுதியில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஜெயலலிதா மரணம்

# சசிகலா தரப்பு கோரிக்கையை நிராகரித்தது விசாரணை ஆணையம்

(சென்னை)

ஜெயலலிதா மரணம் தொடர்பாக அனைவரிடம் விசாரணை முடிவடைந்த பிறகு, குறுக்கு விசாரணை நடத்த வேண்டும் என்ற சசிகலா தரப்பு கோரிக்கையை விசாரணை ஆணையம் நிராகரித்துள்ளது.



தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரித்து வரும் நீதிபதி ஆறுமுகசாமி ஆணையம், தனது விசாரணையைதீவிரப்படுத்திஉள்ளது.

ஜெயலலிதா மரணத்தில் சந்தேகம் எழுப்பியவர்கள், ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள், உறவினர்கள் என 20-க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத் தப்பட்டு விளக்கங்கள் பெறப்பட்டுள்ளன. ஜெயலலிதாவின் தோழியான சசிகலாவுக்கும் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

அவர் சிறையில் இருப்பதால் அவர் சார்பில் சட்டத்தரணி ராஜா செந்தூர்பாண்டியன் விசாரணை ஆணையத்தில் ஆஜரானார். அப்போது, விசாரணை ஆணையத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார்.

அதில், ஜெயலலிதா மரணம் தொடர்பான வழக்கில், சசிகலாவுக்கு எதிராக சாட சியம் அளிப்போர் குறித்த பட்டியலை விசாரணை ஆணையம் வழங்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. மேலும், விசாரணை முடிந்ததும் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடத்தவும் அனுமதி கோரப்பட்டிருந்தது. ஆனால், சசிகலா தரப்பு கோரிக்கையை விசாரணை ஆணைய தலைவ்ரான நீதிபதி ஆறுமுகசாமி நிராகரித்துள்ளார்.

அனைவரிடமும் விசாரித்த பிறகு கடைசியில் குறுக்கு விசாரணை நடத்தினால் வழக்கு முடிவதற்கு 15 ஆண்டுகள் ஆகும் என்றும், இனி வரும் நாட்களில் ஆணையத்திற்கு வருவோரிடம் வேண்டுமானால் குறுக்கு விசாரணை செய்து கொள்ளலாம் எனவும் சசிகலா தரப்பு சட்டத்தரணிக்கு நீதிபதி ஆறுமுகசாமி பதில் அளித்துள்ளார்.


சட்டத்தரணி ராஜா செந்தூர் பாண்டியனிடம் ஜனவரி 22-ல் மீண்டும் விசாரணை நடைபெறும் என்றும் நீதிபதி தெரிவித்தார். (இ-7)

# இந்திய இராணுவத் தளபதி ராவத் கருத்துக்கு பாகிஸ்தான் கண்டனம்

## அணு ஆயுத போருக்கு சவால்

(இஸ்லாமாபாத்)

எங்களின் பலத்தை சோதித்து பார்க்கட்டும், யார் பலம் வாய்ந்தவர்கள் பார்த்து விடலாம் என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் மிரட்டல் விடுத்துள்ளார்



இந்திய இராணுவ தளபதி பிபின் ராவத் டில்லியில் கடந்த 12 ஆம் திகதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது தீவிரவாதிகளை பாகிஸ்தான் கையாளும் முறை தொடர்பாக சமீபத்தில் அதிருப்தி தெரிவித்துள்ள அமெரிக்காவின் எச்சரிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் துடைத்தெறியப்பட வேண்டியவர்கள். பாகிஸ்தான் அரசின் நடவடிக்கையை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றார்.

இந்நிலையில் பிபின் ராவத்தின் இந்த கருத்திற்கு தற்போது பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் தனது டுவிட்டர் மூலம் பதிலளித்துள்ளார். மேலும் இந்தியாவிற்கு பகிரங்க மிரட்டலையும் பாகிஸ்தான் விடுத்துள்ளது. இது குறித்து கவாஜா ஆசிப் பதிவு செய்துள்ள டுவிட்டில் கூறியிருப்பதாவது,

இந்திய ராணுவ தளபதியின் பேச்சு மிகவும் பொறுப்பற்றது.

இது அவரது பதவி க்கு ஏற்றதல்ல. இதன் மூலம் அவர் அணுஆயுத சண்டைக்கு அழைப்பு விடுகிறார். ஒரு வேளை அதுதான் இந்தியாவின் ஆசை என்றால், அவர்கள் வந்து எங்களின் பலத்தை சோதித்து பார்க்கட்டும். யார் பலம் வாய்ந்தவர்கள் என்பது விரைவில் காட்டப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அவரைத் தொடர்ந்து பாகிஸ்தான் வெளியுறவு விவகாரத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் முகம்மது பைசல் வெளியிட்டுள்ள டுவிட்டர்பதிவில், இந்திய இராணுவ தளபதியின் பொறுப்பற்ற, மிரட்டல் தொனியிலான பேச்சு இந்தியாவின் கெட்ட எண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது. பாகிஸ்தான் தனது தாக்குதல், தடுப்பு திறனை காட்டும். இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அந்த வகையில் அவர்கள் எங்களை தவறாக எடை போட வேண்டாம்.

பாகிஸ்தான், தன்னை காத்துக்கொள்ள முழுத் திறனுடன் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

Dr Mohammad Faisal @ForeignOfficePk · 12h
These are not issues to be taken lightly. There must not be any misadventure based on miscalculation. Pakistan is fully capable of defending itself. 2/2
11 69 108

Dr Mohammad Faisal @ForeignOfficePk · 12h
The threatening and irresponsible statement by the Indian Army Chief today is representative of a sinister mindset that has taken hold of India. Pakistan has demonstrated deterrence capability.1/2
24 117 191

Khawaja M. Asif @KhawajaMAsif · 12h
"Very irresponsible statement by Indian Army Chief,not befitting his office. Amounts to invitation for nuclear encounter.If that is what they desire,they are welcome to test our resolve.The general's doubt would swiftly be removed, inshallah."

# தென்னாபி... மர்ம நோயால்...

(நியூயோர்க்)

*தென்னாபிரிக்காவில் லிஸ்டீரியோ சிஸ் அல்லது லிஸ்டீரியா என்ற மர்மநோய் தாக்கியதில் 60 பேர் பலியாகியுள்ளனர்.*

தென்னாபிரிக்காவில் லிஸ்டீரியோசிஸ் அல்லது லிஸ்டீரியா என்ற மர்ம நோய் தாக்கியதில் 60 பேர் பலியாகியுள்ளனர்.

மேலும் 750 பேருக்கு இந்த நோய் தாக்கி இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. இந்த தகவல்களை உலக சுகாதார நிறுவனம் உறுதி செய்து உள்ளது.

இந்த நோய் க்கு காரணமான பக்றீரியா, மண், தண்ணீர், பால்பண்ணை பொருட்கள், கடல் உணவு, பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றில் இருப்பது தெரிய வந்துள்ளது. சின் னஞ்சிறு குழந்தைகள்தான், பெரும் பாலும் இந்த நோயின் இலக்காக இருப் பதாக உலக சுகாதார நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கிறிஸ்டியன் லின்ட்மீயிர் தெரிவித்துள்ளார். இந்த நோய் தாக்கியவர்களில் 40 சதவீதத் தினர் குழந்தைகள்தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

லிஸ்டீரியோசிஸ் கடுமையான நோய் என்றபோதிலும்கூட, அது தடுக்கக்கூடியது, குணப்படுத்தக்

# அமெரிக்காவுடன் தகவ... தொடர்ந்து நடைபெறுகிறது...

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க நாட்டுடனான தகவல் பரிமாற்ற சேவைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பாகிஸ்தான் வெளியுறவு துறை தெரிவித்துள்ளது.



அமெரிக்காவிடம் இருந்து தீவிரவாத ஒழிப்புக்காக பெற்ற நிதியுதவியை பாகிஸ்தான் முறையாக செலவழிக்க வில்லை என ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

இதையடுத்து, பாகிஸ்தானுக்கு அளித்து வந்த இராணுவ நிதி உதவி உட்பட அனைத்து நிதி உதவிகளையும் நிறுத்தி வைத்து டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் உத்தரவிட்டார். அமெரிக்காவின் இந்த அதிரடி நடவடிக்கை பாகிஸ்தானுக்கு ஆத திரத்தை ஏற்படுத்தியது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவுடனான இராணுவ ஒத்துழைப்பு, உளவு தகவல்கள் பகிர்வு ஆகியவற்றை நிறுத்தி வைக்கப் போகிறோம் என பாகிஸ்தான் அறிவித்தது. இது இரு நாடுகள் இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்துவதாக அமைந்தது.

இந்நிலையில், அமெரிக்காவுடனான தகவல் பரிமாற்ற சேவைகள் தொடரும் என பாகிஸ்தான் வெளியுறவு செய்தி தொடர்பாளர் முகமது பைசல் தெரிவித்தார்.

# அணு ஒப்பந்தத்தை குறை... அமெரிக்காவுக்குத் தோ...

(தெஹ்ரான்)

ஈரானின் அணுசக்தித் திட்ட ஒப்பந்தத்தை அமெரிக்கா குறைத்து மதிப்பீட்டுத் தோல்வியடைந்துள்ளதாக, ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரூஹானி தெரிவித்துள்ளார்.



தொலைக்காட்சிச் சேவையொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தோன்றி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...பிரிக்காவில்
## ...ல் 60 பேர் பலி

கூடியதுதான் என்று கூறப்படுகிறது.

அதே நேரத்தில், "இந்த நோய் மிகப்பெரிய சவாலாக அமைந்து உள்ளது. இது சுகாதாரத்துறை யில் மட்டுமல்லாது எல்லா துறை களையும் உள்ளடக் கியது" என்றும் கிறிஸ்டியன் லின்ட் மீயிர் தெரிவித்தார். (இ-7)

## இனவெறி பேச்சு; ட்ரம்ப் மன்னிப்புக்கோர 55 ஆபிரிக்க நாடுகள் வலியுறுத்தல்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் இனவெறி பேச்சுக்கு ஆபிரிக்க யூனியனில் உள்ள 55 நாடுகளும் அவருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி உள்ளது. வெளிநாடுகளில் இருந்து வெளியேறி அமெரிக்காவில் அகதிகளாக பலர் குடியேறி வருகின்றனர். அது குறித்த ஆய்வுக்கூட்டம் தலைநகர் வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் நடந்தது. செனட் உறுப்



பினர்கள் மற்றும் எம்.பி.க்கள் கலந்து கொண்ட இக்கூட்டம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையில் நடந்தது. அப்போது ஹைதி மற்றும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்து அகதிகளாக குடியேறியவர்கள் குறித்து ட்ரம்ப் பேசினார்.

அப்போது மிகமோசமான அருவருக்கத்தக்க நாடுகளில் இருந்து வருபவர்களை நாம் ஏன் வரவேற்க வேண்டும். அவர்களால் அமெரிக்க பொருளாதாரம் எந்தவிதத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே, அவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்றார்.

இதற்குஅவரது குடியரசுகட்சி மற்றும் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியை சேர்ந்த எம்.பிக்கள் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்தனர். இந்த நிலையில் ஆபிரிக்க யூனியனில் உள்ள 55 நாடுகளும் ட்ரம்பின் பேச்சுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி உள்ளது. ட்ரம்பின் பேச்சில் இனவெறி தெரிகிறது. அதற்காக அவர் மன்னிப்புக்கேட்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இதற்கு ட்ரம்ப் மறுப்பு தெரிவித்துள்ளார். எனது பேச்சில் உள்நோக்கம் எதுவும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## கார்த்தி சிதம்பரம் வீடுகளில் நடந்த அமுலாக்கத்துறை சோதனை நிறைவு

(சென்னை)

சென்னை மற்றும் டில்லியில் உள்ள கார்த்தி சிதம்பரத்தின் வீடுகளில் நடந்த அமுலாக்கத்துறையின் சோதனை நிறைவு பெற்றது.

சென்னை நுங்கம்பாக்கம், சாஸ்திரி பவன் அருகில் பைகிராப்ட்ஸ் தெருவில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் வீடு உள்ளது.

நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் அமுலாக்கத் துறை அதிகாரிகள் திடீர் என்று சோதனை மேற்கொண்ட னர்.

இந்த சோதனையில் ஒரு பெண் அதிகாரி உட்பட 5 அதி காரிகள் ஈடுபட்டனர். அவர்கள் டில்லியில் இருந்து வந்திருந் தனர். சோதனை நடந்த போது ப.சிதம்பரத்தின் மனைவி நளினி, மருமகள் ஸ்ரீநிதி, பேத்தி ஆகியோர் இருந் தனர். ப.சிதம்பரம் டில்லியில் இருந்தார். கார்த்தி சிதம்பரம் சிவகங்கை சென்றிருந்தார்.

சோதனையின் போது ப.சிதம்பரத்தின் வீட்டு முன்பு துப்பாக்கி ஏந்திய மத்திய பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. உள்ளே யாரை யும் அனுமதிக்கவில்லை.

முற்பகல் 10.45 மணிக்கு இந்த சோதனை முடிந்தது. மொத்தம் 3 மணி நேரம் சோதனை நடந்தது.

ப.சிதம்பரத்தின் பூர்வீக வீடு காரைக்குடியில் உள்ளது. அங்கும் நேற்று முன்தினம் காலை முதல் அமுலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள்.

நுங்கம்பாக்கம் எல்ரோடா கட்டடத்தில் உள்ள கார்த்தி சிதம்பரம்அலுவலகத்திலும் டில்லியில் உள்ள ப.சிதம்பரம் வீட்டிலும் ஒரே நேரத்தில் சோதனை நடத்தப்பட்டது. அமுலாக்கத்துறை சோதனை தொடர்பாக ப.சிதம்பரம் கூறியதாவது.

அமுலாக்கத்துறையின் சோதனை திட்டமிட்ட நாடகம். இந்த சோதனையில்ஏதும் கைப்பற்றப் படவில்லை. அமுலாக்கத்துறையின் நாடகத்தை ஏற்கனவே நான் எதிர்பார்த்திருந்தேன்.

ஏர்செல் மேக்கிஸ் வழக்கில் 3 முறை சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் எந்த விசாரணை அமைப்பும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. சட்ட விரோத பணப் பரிமாற்றத்தை அமுலாக்கத் துறை விசாரிக்க முடியாது. அமுலாக்கத்துறை விசாரிக்க தகுதி இல்லை.

கார்த்தி சிதம்பரம் டில்லியில் என் வீட்டில் வசிக்கிறார் என்று நினைத்து சோதனை நடத்தினார்கள். டில்லியில் உள்ள இல்லத்தில் படுக்கை அறைமற்றும்சமையல்அறையில்சோதனை நடந்தது. பின்னர் மன்னிப்பு கேட்டு சென்றார்கள் எனத் தெரிவித்தார். (இ-7)

## ...வல் பரிமாற்றம் ...றது–பாகிஸ்தான்



இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில், தகவல் தொடர்பு வழிகளை அமெரிக்காவும், பாகிஸ்தானும் மூடி விடவில்லை. தொடர்ந்து திறந்து தான் வைத்துள்ளன.

ஒத்த ஆர்வம் உடைய பல்வேறு பிரச்சினைகளில், இருதரப்பும் பரஸ்பரம் தகவல்களை ஒருவருக்கொ ருவர் பரிமாறிக் கொண்டு தான் இருக்கி றோம் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

## ட்ரம்ப் மீது அதிருப்தி தூதுவர் இராஜினாமா!

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுவதை விட கௌரவமாக பதவியை இராஜினாமாச் செய்ய பனாமா நாட்டுக்கான அமெரிக்கத் தூதர் முன்வந்துள்ளார்.

மத்திய அமெரிக்கா - தென் அமெரிக்கா இடையே பனாமா கால்வாயின் ஓரத்தில் அமைந்துள்ள பனாமா நாட்டின் அமெரிக்க தூதராக பணியாற்றி வந்தவர், ஜான் ஃபீலே.



கடந்த டிசெம்பர் மாதம் இவர் தனது பத வியை ராஜினாமா செய்து விட்டதாக தற்போது தெரிய வந்துள்ளது.

அமெரிக்க கடற்படையில் முன்னர் பணியாற்றிய அனுபவம் கொண்ட ஜான் ஃபீலே, தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு கீழே பணியாற்ற முடியாது என்பதால் கௌரவத்தின் உந்துதலால் பனாமா நாட்டுக்கான தனது தூதர் பதவியை விட்டு விலகுவதாக இராஜினாமா கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அயல்நாட்டு சேவை பிரிவின் இளநிலை அதிகாரியான நான், ஒருசார்பின்றியும், சில கொள்கைகளில் எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அவரது நிர்வாகத்துக்கு நேர்மையாக பணியாற்றுவேன் என்றும் உறுதிமொழி மேற்கொண்டு இந்த பணியில் சேர்ந்தேன்.

அந்த உறுதிமொழியின் மீது என்னால் செயலாற்ற இயலவில்லை என்றால் கௌரவம் கருதி ராஜினாமா செய்வது நல்லது என்ற கால கட்டத்துக்கு நான் தளளப்பட்டேன். அதற்கான நேரம் வந்து விட்டது' என தனது அராஜினாமா கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின்மீது அதிருப்தி கொண்டு பதவியை இராஜினாமா செய்யும் இரண்டாவது அமெரிக்க தூதர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, சோமாலியா நாட்டிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் நைரோபி நாட்டு விவகாரங்களை கவனித்து வந்த எலிசபெத் ஷேக்கல் போர்ட் என்ற பெண் அதிகாரி சமீபத்தில் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

மனிதவுரிமைகளுக்கு முக்கியத்துமளிப்பது எனும் கொள்கையை தற்போதைய அமெரிக்க நிர்வாகம் கைவிட்டு விட்டதால் தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் அனுப்பியிருந்த கடிதத்திலும் அவர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ...றைத்துமதிப்பிட்ட ...தால்வி - ஈரான்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 'ஈரானின் அணுசக்தித் திட்ட ஒப்பந்தத்தை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டு, ஈரான் மற்றும் முக்கிய வல்லரசு நாடுகளுக்கிடையில் அமெரிக்கா தோல்வியடைந்துள்ளது. இருப்பினும், இந்த அணுசக்தித் திட்ட ஒப்பந்தம் ஈரானுக்குப் பாரிய வெற்றியாகும்'

'ஈரானின் அணுசக்தித் திட்ட ஒப்பந்தம் தொடர்பாக, இனிமேல் எந்தவித பேச்சுவார்த்தையும் நடைபெறமாட்டாது' எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஓய்வு விடுதியில் தீவிபத்து
## கூட்ட நெரிசலில் சிக்கி எட்டுப் பேர் உயிரிழப்பு





(லிஸ்பன்)

போர்த்துகல் நாட்டில் ஓய்வு விடுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்து மற்றும் அதைத்தொடர்ந்து ஏற்பட்ட கூட்டநெரிசலில் சிக்கி சுமார் 8 பேர் உயிரிழந்தனர்.

போர்த்துக்கல் நாட்டின் வடக்கு பகுதியில் இருக்கும் வில்லா நோவா டா ரெயின்ஹா நகரில் உள்ள ஒரு இரண்டு மாடி ஓய்வு விடுதியில் வார விடுமுறை களிக்க பொது மக்கள் கூடினர்.

அப்போது அங்கு எதிர்பாராத விதமாக தீவிபத்து ஏற்பட்டது.

இதையடுத்து மக்கள் அலறியடித்து கொண்டு வெளியேறினர். இதன்காரணமாக அப்பகுதியில் கூட்டநேரிசல் ஏற்பட்டது. இந்த் கூட்ட நெரிசலில் சிக்கி சுமார் 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் அப்பகுதிக்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் போராடி தீயை அணைத்தனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு போர்த்துகலில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் 100க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சருக்கு நாமல் எச்சரிக்கை

(கொழும்பு)

பொய்யான கருத்துக்களைப் பரப்புவதை மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய நிறுத்திக் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார். இல்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ குடும்பப் பிரச்சினையொன்றின் காரணமாக வெளிநாடு சென்றுள்ளதாக இசுறு தேவப்பிரிய ஊடகமொன்றிடம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)



# தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அலுவலகம் மீது தாக்குதல்



(ஏறாவூர்) மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் பகுதியில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலில் 20ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரின் அலுவலகம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அலுவலகத்தின் மேற்பகுதியில் இருந்த குறித்த வேட்பாளரின் பதாகை சேதப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு சென்ற ம்ட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் அலுவலகத்தை பார்வையிட்டதுடன் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்தார்.

குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்எஸ்.வியாழேந்திரன் தோல்வி பயத்தில் இருப்பவர்களே இவ்வாறான செயற்பாடுகளை செய்வதாகவும் தெரிவித்தார். (இ-7)

# மதுபானம் தொடர்பில் நிதி அமைச்சின் தீர்மானம் குறித்து ஜனாதிபதி விரைவில் தீர்மானம்-அமரவீர

(கொழும்பு)

நாட்டிலுள்ள மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கு வழங்கப்பட்டிருந்த நேரத்தை நீடிப்பதற்கும், பெண்கள் மதுபான விற்பனை, கொள்வனவில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவதற்கும் அரசாங்கம் சட்டம் உருவாக்கியமை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட அறிவிப் பொன்றை விடுக்க தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த தீர்மானம் குறித்து அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தவித அறிவிப்பும் செய்யப்படவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் கொள்கைக்கு எதிரானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஓரிரு தினங்களில் இது தொடர்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட அறிவிப் பொன்றை நாட்டு மக்களுக்கு விடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# டில்லியில் மங்கள-சுஷ்மா பேச்சு



(டில்லி)

நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ்"க்கும் இடையில் டில்லியில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த இந்தச் சந்திப்பின் போது, அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான இரு தரப்பு விவகாரங்கள் குறித்து, இரண்டு தலைவர்களும் பேச்சுக்களை நடத்தியதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### வார்த்தைகளை விட்டுவிடுகிறவர்கள்!

"என்னய்யா ஸ்கூல் நடத்துறீங்க. நீங்க செய்யுற அயோக்கியத்தனங்களையெல்லாம் பார்த்துக்கிட்டு சும்மா இருக்கச் சொல்றீங்களாய்யா? மனுஷன்களாய்யா நீங்கள்லாம்? என்கிற பாணியில் ஓர் அப்பாக்காரர் ஒரு பள்ளிக்கு வந்து கத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். சாவி கொடுக்கப் பின்னால் அம்மாக்காரி.

இவர் காரியவாதி இல்லை என்று நாம் உடனே முடிவுக்கு வந்துவிடலாம்.

ரேஷன் கடையில் க்யூவில் நின்ற வருக்கும் ஒரு கடை ஊழியருக்கும் வாக்கு வாதம் "திருட்டுப்பயலே! எவனடா ஏமாத்தப் பார்க்குறே? நீங்க பண்ற கோல்மாலெல்லாம் இந்த ஊரு உலகுக்குத் தெரியாதுன்னு நெனச்சிக்கிட்டிருக்கியாடா? என்கிற பாணியில் அவர் பெரிய சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறார் என்று பொருள்.

குடும்ப உறுப்பினர்களையோ வேலையாட்களையோ கண்டிக்கும் போது கூட எருமை மாடு! அவனே! இவனே! என்கிற பாணியில் க்யூவில் நின்றவர் பேசுகிறார் என்றால் அவர் பெரிய சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறார் என்று பொருள்.

குடும்ப உறுப்பினர்களையோ வேலையாட்களையோ கண்டிக்கும் போது கூட எருமை மாடு! அவனே! இவனே! என்றெல்லாம் ஆரம்பித்துவிடக்கூடாது. செயலைத்தான் கண்டிக்கவேண்டுமே தவிர நபர்களை நேரடியாகக் கண்டித்து அவர்களுக்குப் பட்டம் ஒன்றைச் சூட்டி கெட்ட வார்த்தைகளால் பூசித்து விடக் கூடாது.

"நீ செய்தது தவறு. இதை என்னால் ஏற்க முடியாது. இதற்கு என்ன விளக்கம் சொல்லப் போகிறாய்?" என்று விடயத்தில் குறியாக இருக்க வேண்டுமே தவிர "நீ ஒரு பிராடுப் பயல்!" என்று ஆரம்பித்து விடக் கூடாது.

அநாவசியமான வார்த்தைகளை விடும் போது பிரச்சினையே திசை திரும்பி விடுகிறது. பள்ளி முதல்வர், நிர்வாகிகள்; ரேஷன் கடைக்காரர், குடும்ப உறுப்பினர்கள் என எவராக இருந்தாலும் உடனே சில காரியங்களை செய்கிறார்கள்.

முதலாவதாக "நீ(ங்க) ஒழுங்கா?" என்று ஆரம்பிக்கிறார்கள். அந்த வார்த்தையை எப்படி நீ சொல்லப் போச்சு என்று சண்டைக்கு வருகிறார்கள். சிலர் அடிதடியில் கூட இறங்கி விடுகிறார்கள்.

ஆக நோக்கம் என்பதே நிறைவேறாமல் போய் இலக்கே மாறிவிடுகிறது.

செயல்களை மட்டும் நாகரிகமான வார்த்தைகளால் கண்டித்தால் நல்ல பலன் கிடைக்கிறது. நபர்களை அர்ச்சனை செய்தால் அது பெரிய விவகாரமாகி விடுகிறது.

இந்த மாதிரி விடயங்களில் இரு அம்சங்கள் மிக முக்கியம். முதலாது 'நான் ஏதாச்சும் தப்பாப் பேசினேனா? என்று நாம் தைரியமாகக் கேட்கக்கூடிய நிலைமை கடைசி வரை நிலவவேண்டும்.

இது மட்டும் போதாது. நடந்ததையெல்லாம் கேள்விப்படுகிற ஒருவர்கூட, "அவர் சொன்னதில் என்னப்பா தப்பு?" என்று கேட்கும் நிலையும் நிலவ வேண்டும்.

இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் நம் நோக்கமும் நிறைவேறும்; நம்மையும் நாம் காப்பாற்றிக்கொண்டு விடலாம்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு விசாரணை செய்யத் திறனில்லை!

## சட்டத்தரணி பவானி பொன்சேகா விசனம்

(கொழும்பு)

**யுத்தத்துடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கான திறனையோ? நிபுணத்துவத்தையோ? சட்டமா அதிபர் திணைக்களம் கொண்டிருக்கவில்லை என மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் சட்டத்தரணி பவானி பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



நிலைமாறு காலத்தில் நீதி என்ற தொனிப்பொருளில் கொழும்பிலுள்ள இனத்துவ ஆய்வுகளுக்கான கற்கை நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களம்சுயாதீனமானதாக காணப்படவில்லை என சுட்டிக் காட்டிய அவர், இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது எனவும் தெரிவித்தார். (இ-7)

## நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டார்

(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூத்த உறுப்பினரான சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கறுப்புப் பட்டியலில் இடம் பெற்றிருந்ததால் இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கப்படாமல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும் நேற்றுமுன்தினம் காலை நாடு கடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் அபுதாபியில் இருந்து எதிஹாட் விமான மூலம், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், நேற்று முன்தினம் காலை ஸ்ரீலங்கன் விமான சேவை மூலம் பாங்கொக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கனடாவின் ரொரன்டோ நகரில் இருந்து நாடு கடந்த அரசாங்கத்தின் அரசவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட சுரேஸ்நாத் இரத்தினபாலன் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தீவிரமான கருத்துக்களை வெளியிட்டு வந்தவர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவரை இலங்கைக்குள் நுழைய குடிவரவு அதிகாரிகள் அனுமதி மறுத்திருந்த நிலையில், பாங்கொக்கிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இவர்களைத் திருப்பி அனுப்பும் உத்தரவை இரத்துச் செய்வதற்கு அமைச்சர்கள் சிலர் முயற்சி செய்ததாகவும், ஆனால் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளின் இறுக்கமான போக்கினால், அது சாத்தியமாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடுகடத்தும் உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்த அமைச்சர்களிடம், அதனை எழுத்துமூலம் தருமாறு குடிவரவுத் திணைக்களம், கோரியதாகவும் அவர்கள் அதற்கு இணங்காத நிலையில், சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும் நாடு கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் விமான நிலையத்துக்குள் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றிலேயே முக்கிய பிரமுகர்களுக்குரிய வசதிகளுடன் தங்க வைக்கப்பட்டிருந்ததாகவும், நாடு கடத்தப்படும் ஏனையவர்களைப் போன்று நடத்தப்படவில்லை என்றும் கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 2-வது தவணைப்பணம் இலங்கைக்கு




(கொழும்பு)

இலங்கை அரசானது சீனாவின் மெர்ச்சண்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திடமிருந்து 97.365 மில்லியன் அமெரிக்க டொலர்களை தமது முதலீட்டின் இரண்டாவது கட்டமாக பெற்றுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சீனா மெர்ச்சண்ட் போர்ட் ஹோல்டிங்ஸ்கம்பெனி லிமிட்டெட் ஆகியவற்றிற்கு இடையில் கடந்த டிசெம்பர்09 ஆம்திகதி கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் படி அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலீட்டிற்காக 1.12 பில்லியன் அமெரிக்க டொலர்களை துறைமுக அதிகாரசபை செலுத்துவதாக அந்நிறுவனம் ஒப்புக்கொண்டது.

இதற்காக முதற்கட்ட பணமாக இலங்கை அரசாங்கத்திற்கு 292.1 மில்லியன் அமெரிக்க டொலர் 2017 டிசெம்பரில் கிடைக்கப் பெற்றதுடன் மீதித்தொகை 6 மாதங்களுக்குள் இரண்டு தவணைகளில் செலுத்தப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று இரண்டாவது தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. (இ)

## ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை -ருவான்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கலவரமாக நடந்துகொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடந்த சம்பவத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தின் போது பிரதமரின் உரைக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக சபையில் பெரும் அமளி ஏற்பட்டதுடன் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினர் பரஸ்பரம் தாக்குதல் நடத்திக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தைப்பொங்கல் தினத்தன்று யானையால் விவசாயி பலி

(கொழும்பு)

கிரான் பிரதேச செயலக பிரிவிலுள்ள கற்கிளாச் சோலை பகுதியில் காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை ஏழு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் ஏறாவூர்ப்பற்று சித்தாண்டி பிரதான வீதியை அண்டி வாழும் தம்பிமுத்து தங்கசாமி (வயது 57) என்பவரே உயிரிழந்துள்ளார்.


வயல் பகுதியின் ஊடாக வரும்போது குறுக்கிட்ட காட்டு யானை இவரைத் தாக்கியதில் அவர் தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதுடன் தைப்பொங்கல் தினமான நேற்று நேர்ந்துள்ள குறித்த சம்பவம் அப்பகுதி மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ரணில் பதவி நீக்கம்!

## புதிய அரசை அமைக்க மைத்திரி திட்டம் உள்ளூராட்சி தேர்தலில் பின் இது நடக்கும்



(கொழும்பு)

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கிவிட்டு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் புதிய ஆட்சி மலரவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய ஆட்சி அமைப்பதற்காக ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் இருந்து விலகி சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளத் தயாராக உள்ளதாகவும் குறித்த அமைச்சர் கூறியுள்ளார்.

மைத்திரி தலைமையில் புதிய ஆரசாங்கத்தினை அமைக்க ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள் அற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்தவை பிரிந்து மைத்திரியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் சுதந்திரக் கட்சியின் அமைச்சர் தெரி வித்துள்ளதாகவும் குறித்த செய்தி யில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதேபோல, மத்திய வங்கி யின் ஊழல் மற்றும் மகிந்த ஆட்சி காலத்தில் நடைபெற்ற ஊழல் போன்றவற்றுக்கு நட வடிக்கைகளை எடுக்க வேண்டுமாயின் ரணில் பிரதமர் பதவியில் இருந்து விலகி, புதிய பிரதமர் நிய மிக்க வேண்டிய அவசியம் உள்ளதாக சுதந்திரக்கட்சி யின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியிடம் தெரி வித்துள் ளதாகவும் செய்திகள் வெளி யாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வியாபாரிகளை அகற்றுவதற்கு இடமளிக்கப் போவதில்லை

### அமைச்சர் பைஸர் தெரிவிப்பு



(கொழும்பு)

புறக்கோட்டை நடைபாதை வியாபாரிகளை அகற்றுவதற்கு யாருக்கும் இடமளிக்கப் போவதில்லையென அமைச்சர் பைஸர்முஸ்தபா தெரிவித்துள்ளார்

கொழும்பு- புறக்கோட்டை பகுதியில் நேற்று முன்தினம் நடைபாதை வியாபாரிகளை சந்தித்த போதுஅவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## அதிசய கோழி முட்டை!



(ஹற்றன்)

ஹற்றன் நகரில் வீடொன்றில் இயங்கும் கோழிப் பண்ணையில் கோழி ஒன்று நேற்று முன்தினம் அபூர்வமான முட்டையை இட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு முட்டையின் எடையானது 80 முதல் 90 கிராம் எடையுடன் காணப்படும். எனினும் இந்த முட்டை 120 கிராம் எடையுடன் கூடிய மிகவும் பெரிய முட்டையாக காணப்படுகி றது.

இந்த கோழிப் பண்ணையில் வளர்க்கப்படும் கோழி ஒன்று முதல் முறையாக இவ்வாறு பெரிய முட்டையை இட்டுள்ளதாக அதன் உரிமையாளரான எஸ்.மூர்த்தி தெரிவித்துள்ளார். (இ-7)

## சர்வதேசத்தை ஏமாற்றவே பிள்ளையானுக்கு கிழக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது

### யோகேஸ்வரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(ஏறாவூர்)

போராளிகளாக இருந்து தங்களுடன் இணைந்தவர்களை ஆட்சியாளர்களாக நியமித்துள்ளோம் என சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பிள்ளையானுக்கு கிழக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் அலுவலகத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2008 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி முஸ்லிம் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்ததன் காரணமாக தமிழர் ஒருவன் முதலமைச்சராக வரவேண்டும் என்ற நோக்கத்திற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்ட பிள்ளையானுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வாக்களித்தார்கள். இத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடவில்லை.

போராளிகளாக இருந்து அரசாங்கத்துடன் இணைந்தவர்களை முதலமைச்சராக நியமித்துள்ளோம். வடக்கு- கிழக்கினைப் பிரித்து விட்டோம்.

பிரிந்த வடக்கு- கிழக்கிலே கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து வந்த பிள்ளையானுக்கு கொடுத்துள்ளோம். இந் நிலையில், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தால் பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

பிள்ளையான் முதலமைச்சாக இருந்த காலத்தில் மாகாணசபையில் தன்னால் முடிந்த வரை உழைத்தார். வெளி நாடுகளிலிருந்து வந்த நிதிகள் சுருட்டப்பட்டன. கொரிய நாட்டுக்கு வேலைக்கு அனுப்ப வந்த நிதி, மட்டக்களப்பில் முதலமைச்சர்கள் மாநாடு நடத்திய நிதி போன்றவை தொடர்பாக கணக்குகள் இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழன் என்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

பிள்ளையானின் ஆட்சிக் காலத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் கிறீஸ் மனிதர் தோற்றம் பெற்றது. இது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போராடியது ஆனால் பிள்ளையான் பார்த்துக் கொண்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் யுத்தம் நடைபெற்ற போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கரடியனாறு நிதிக் காப்பகத்திலிருந்த பணத்தை உரப்பையில் கொண்டுவந்தவர் பிள்ளையான்.

ரிதிதென்னவில் இஸ்லாமிய பல்கலைக்கழகம் அமைக்க ஹிஸ்புல்லாவிற்கு பெரும் தொகை காணியை வழங்கியவர் பிள்ளையான். வாகரைப் பிரதேசத்திலுள்ள 51 ஆயிரத்து 800 ஏக்கர் தமிழ் மக்களின் காணியை இணைத்து ஓட்டமாவடியை நகரசபையாக மாற்றுவதற்கு இணாங்கியவர் பிள்ளையான். இதனைத் தடுத்தவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மாற்றத்திற்காக மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்தோம்.

அதை வைத்துக் கொண்டு இந்த தேர்தலில் போட்டியிடுபவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை எதிர் பார்க்க முடியாது. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் தமிழ் மக்கள்.

இந்த மண்ணிலே எமது இனம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காக போராடி தமது உயிர்களை தியாகம் செய்தார்கள். பல சொத்துக்களை இழந்தோம் என்பதை சற்று சிந்திக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாடளாவிய ரீதியில் களைகட்டிய பொங்கல்







(கொழும்பு)

உழவர்திருநாளான தைப் பொங்கல் பண்டிகையை நாட்டின் சகலபாக ங்களிலுமுள்ள மக்கள் நேற்று ஞாயிற் றுக்கிழமை வெகு விமரிசையாக கொண்டாடினர்.


குறிப்பாக தலைநகர் கொழும்பிலுள்ள சகல இந்து ஆலயங்களிலும் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதோடு, மக்கள் தமது வீடுகளிலும் பொங்கல் பொங்கி மிகவும் விமரிசையாக கொண்டாடினர்.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் நேற்று காலை ஆலயங்களிலும் வீடுகளிலும் பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு படைத்து, பொங்கல் பண்டிகையை கொண்டாடியுள்ளனர்.

அதேபோன்று கிழக்கில் மட்டக்களப்பு திருகோணமலை உள்ளிட்ட பல பாகங் களிலும் இந்துக்கள் தைத் திருநாளை மிகவும் குதூக லத்துடன் கொண்டாடினர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவின் தோல்வி நிச்சயம் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

அமீர் அலி தனக்கு செல்வாக்கு இருப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சியிடம் காட்டிக் கொண்டிருக்கும் படம் இந்த தேர்தலோடு முடிவுக்கு வரும். ஓட்டமாவடி பிரதேச சபையை வெல்லக்கூடிய சூழலை இப்போது ஏற்படுத்தியிருக்கிறோம். வாழைச் சேனையில் ஐக்கிய தேசியக் கட்சியையும், இரட்டைக்கொடியையும் தோல்வியடைச் செய்யவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் ஒட்டகச் சின்னத்தில் (சுயேட்சைக் குழுவில்) போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் தேர்தல் பிரசார அலுவலகங்களை நேற்று வாழைச்சேனையில் திறந்து வைத்த பின்னர், கல்குடா தொகுதி அமைப்பாளர் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் போட்டியிட்ட காரணத்தினால், அமீர் அலி சில நூறு வாக்குகளால் தப்பிப்பிழைத்து உறுப்பினராக தெரிவானார். கல்குடா தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் பெரியதொரு முன்னேற்றத்தை அத்தேர்தலில் கண்டுகொண்டது.

பசீர் சேகுதாவூதுக்கு மூன்று முறை தேசியப்பட்டியல் கொடுத்து நான்காவது தடவையும் கொடுக்கவில்லையென்றதால், தலைவர் மீது அவதூறு சொல்லிக்கொண்டு திரிகிறார்.

அதுபோல, ஹஸன் அலியும் இரண்டு தடவை தேசியப் பட்டியல் பெற்றுக்கொண்டு மூன்றாவது தடவையும் அதை கேட்டு முரண்பட்டுச் சென்றுள்ளார். கட்சியில் அனுபவித்தவர்கள் விலகிச் சென்றாலும், கட்சியின் ஆதரவாளர்கள் எங்களுடன் தான் இருக்கின்றனர்.

அம்பாறையில் யானைச் சின்னத்தை எங்களிடம் தந்த ஐக்கிய தேசியக் கட்சி, இங்கு அமீர் அலியிடம் கொடுத்துள்ளது. நாங்கள் யானையை தோற்கடித்து காட்டும்போது, தான் விட்ட தவறை பிரதமர் உணர்ந்துகொள்வார்.

மறைந்த தலைவர் அஷ்ரஃபின் காற்றுக்கூட படாத மயில் கட்சியின் தலைவர். இப்போது அவரின் கனவுகளை பேசிக்கொண்டு, அவரது படத்தையும் போட்டு போஸ்டர் அடித்து திரிகிறார்.

இப்படியான சூழ்நிலைகளில் அசல் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் இவர்களுக்கு சோரம்போக முடியாது.

நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற இந்த நேரத்தில்தான் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும். இதற்கு நீங்கள் எங்களின் கரங்களை பலப்படுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அகில இலங்கை கம்பன் கழக ஆரம்பகாலத்தலைவர் திருநாவுக்கரசு திருநந்தகுமாரின் மணிவிழா நிகழ்வுகள் அண்மையில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இடம்பெற்றது.

# 12 வயதுச் சிறுவன் டெங்கால் மரணம்

(ஏறாவூர்)

தீவிர டெங்குக் காய்ச்சல் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர கண்காணிப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 12 வயதுச் சிறுவன் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

ஏறாவூர் மிச்நகர் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (இல்மா வித்தியாலயம்) யில் 7ஆம் ஆண்டில் கற்ற என். எம். எம். முஆத் (வயது 12) என்ற மாணவனே இவ்வாறு டெங்கு நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி மரணித்துள்ளார். ஏறாவூர் அல் முனீறா பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் என்.எம். மஹாத்தின் மகனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



கடந்த சில தினங்களாக இவர் காய்ச்சல் .காரணமாக ஏறாவூர் ஆதார வைத்தியு சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையிலேயே சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1305

Search for people, places and things Nagendram Home

### ராகுலன்

அசைவ ஹோட்டல்ல சிக்கன் பிரியாணிக்கு முட்டை இலவசமா குடுக்கிறாங்க...



எப்பவாவது சைவ ஹோட்டல்ல பொங்கலுக்கு வடை இலவசமா குடுங்கிறாங்களா...

### கமலி

மன்னா... எதிரிநாட்டு மன்னன் உங்களை போருக்கு அழைக்கிறார்...



போருக்கெல்லாம் வரமுடியாது, வேண்டுமானால் பாருக்கு வரச்சொல்லு அடிச்சு பார்க்கலாம்

### கபிலா

உன்னக் கட்டுனதுக்கு ஒரு கழுதைய கட்டியிருக்கலாம்



என்ன பண்றது உங்களுக்கு கிடைக்காத அந்த பாக்கியம் எனக்கு கிடைச்சிருக்கு

### ஆரவ்

ஒரு கொட்டாவி விட்டு ஐம்பது பேருக்கு மரண பயத்தை உண்டாக்க...



பஸ் டிரைவலால் மட்டுமே முடியும்....

### ஆதித்யா

கழுவிக் கழுவி ஊற்றுவதில் என்றும் முதல் இடம் பிடிப்பது



டீக்கடை மாஸ்டர்தான்...

### ஆரணி

என் கணவருக்குத் தெரியாம ஒரு புடவைகூட நான் எடுக்க முடியாது... ஏன்?



துவைக்கும் போது கண்டுபிடிச்சிடுவாரே...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வெறுப்புக்கு அரசியல்வாதிகளின் மோசடிகளே காரணம்

## ஜே.வி.பி.தலைவர் அநுர விசனம்

(கொழும்பு)

மக்கள் அரசியல்வாதிகள் மீது கொண்டுள்ள வெறுப்புக்கு அவர்களின் மோசடிகளே காரணம் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியல்வாதிகளின் மோசடிகள் காரணமாக மக்களுக்கு அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றுக்காக மக்கள் சிறந்த மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யவேண்டும்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



## மஞ்சள் கடவையை கடக்க முற்பட்டவர் அம்புலன்ஸ் மோதி உயிரிழப்பு!

(ஏறாவூர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸ் வண்டியில் பாதசாரி ஒருவர் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு - கொம்மாதுறை பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில், செங்கலடி, கொம்மாதுறையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் (வயது 63) என்பவரே பலியானவராவார்.

சந்திவெளி வைத்திய சாலையிலிருந்து நோயாளர் ஒருவரை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது கொம்மாதுறை பிரதான வீதியிலுள்ள மஞ்சள் கடவையை கடக்க முற்படுகையிலேயே அம்புலன்ஸ் வண்டியுடன் மோதுண்டதில் ஸ்தலத்திலேயே உயரிழந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## திடீரென ஏற்பட்ட குழப்பத்தால் மக்கள் மீது கண்ணீர் புகை வீச்சு

### 13 பேர் கைது

(கொழும்பு)

கேகாலை - அவிசாவளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 13 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர் புகைவீச்சு மேற்கொண்டுள்ளனர்.

அந்த பகுதியில் இடம்பெற்ற பாரிய விபத்தை தொடர்ந்தே இந்த பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## முறி விசாரணை அறிக்கை பிரதி என்னிடமும் உண்டு

### ரவி கருணாநாயக்க சர்ச்சை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த விசாரணை அறிக்கையின் பிரதி தம்மிடம் உள்ளது என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு அண்மையில் ஜனாதிபதியிடம் விசாரணை அறிக்கையை சமர்ப்பித்திருந்தது.

இந்த விசாரணை அறிக்கையின் பிரதியொன்றே இவ்வாறு தம்மிடம் உள்ளது என ரவி கருணாநாயக்க சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)



## துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஒருவர் பலி-ஒருவர் காயம்

(கொழும்பு)

ரக்குவானை, கொஹம்பகந்த - லபுவல்வத்தை வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கஹவத்தை, லபுவல்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் தோட்டா ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கம்பஹா பட்டபொத பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து கம்பஹா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்தப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மண் வெட்டிக் கொண்டிருந்த குழுவொன்று மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவர் மீது பலமுறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 33 கோடி ரூபாய் இழப்பீடு

(கொழும்பு)

நாட்டில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேர் நன்மை அடைந்துள்ளனர். கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் வீசிய சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் பணியில் 90 சதவீதமான பணிகள் பூர்த்தியாகியுள்ளன.



இதன்கீழ் 33 கோடி ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

## 12 வயதுச் சிறுமி மர்ம மரணம்

(ஏறாவூர்)

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவின் பிறைந்துறைச்சேனையில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 12 வயதுடைய சிறுமியொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் சிறுமியின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கைக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சட்ட வைத்திய அதிகாரியின் உடற் கூற்று பரிசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சிறுமியின் தாய் முதல் கணவன் பிரிந்து சென்ற நிலையில் இரண்டாந் தாரமாக இன்னொருவரைத் திருமணம் செய்துள்ளதாகவும் சிறுமி தனது தாய் மற்றும் சிறிய தந்தையுடனேயே வாழ்ந்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறுமி கடைசியாக "நீங்கள் சந்தோசமாக வாழுங்கள்" என்ற வசனத்தை எழுதி வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளனர். (இ-7)

## பெண் பொறுப்பதிகாரியை தாக்கிய சாரதியும் நடத்துநரும் கைதாகினர்

(கொழும்பு)

பாணந்துறை பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் பெண் பொறுப்பதிகாரியை தாக்கிய சம்பவம் ஒன்று தொடர்பில் பேருந்து சாரதியும் நடத்துநரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பெண் அதிகாரி பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பணி நிறைவடைந்து இல்லத்திற்கு திரும்பும் வழியில் நேற்று முன்தினம் மாலை குறித்த அதிகாரி தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கனரக வாகன சாரதிகளுக்கு மற்றுமொரு அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

கனரக வாகன சாரதிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு மேலதிகமாக மற்றுமொரு அனுமதிப்பத்தி[illegible] [illegible] மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த வேலைத்திட்டம் இந்த வருடம் முதல் நடை[illegible]படவுள்ளது.

[illegible] பேருந்து சாரதிகளும் இந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

கனரக வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதி பத்திரத்தை பெற்று இரண்டு வருட காலப்பகுதியை கொண்டுள்ள நபர்கள் இந்த அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

பேருந்து செலுத்துவதற்கு இது விசேட தகுதியாக கொண்டதாக அமையும் என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் சஞ்சீவ பந்துகீர்த்தி தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2018-12.02.2018



பொதுப்பலன்

உங்களுக்கு இந்த தை மாதம், தனவரவு அதிகரிக்கும் மாதமாகவே அமைகின்றது. மாற்றங் களும், ஏற்றங்களும் வந்து சேரும். தீட்டும் திட்டங்கள் வெற்றி பெறும். அஷ்டமத்துச் சனி விலகி விட்டதால் இனித் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிட்டும். தொழில் ரீதியாக எடுக்கும், புது முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும்.

உத்தியோகம்

அலுவலகப் பணியில் இருப்பவர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு முன்னேற்றம் காண்பீர்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். தொழில் செய்பவர்களுக்கு, இது யோகமான நேரம். தொழிலுக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். தொழிலை விரிவு செய்ய வங்கிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். கூட்டுத் தொழில் செய்பவர்கள், புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொண்டு முன்னேறுவர். பங்குச்சந்தையில் ஈடுபட்டிருப்பவர்கள் ஏற்றம் காண்பர். எதிர்பார்த்த இனங்களில் இலாபம் கிடைக்கும்.

உடல்நலம்

சுக ஸ்தானத்தில் ராகு இருப்பதால், எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்படலாம். குறிப்பாக மாதத் தொடக்கத்தில் மருத்துவச் செலவு உருவாகலாம்.

குடும்பம்

குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். சகோதரர்கள் உங்களைப் புரிந்து கொண்டு செயல்படுவர். உறவினர்கள் உதவியாக இருப்பர். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

பணவரவு

தனாதிபதி சுக்ரன், பஞ்ச மாதிபதியோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பிள்ளைகளால் உதிரி வருமானம் உண்டு. பண வரவு போதுமானதாக இருக்கும். சொத்து விற்பனையாலும் லாபம் உண்டு.

குரு பார்வை

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியை, இராசிநாதன்செவ்வாயும் 9,12 இடங்களுக்கு அதிபதியான குருவும் பார்க்கிறார்கள். எனவே சுபகாரியங்கள்நடைபெறுவதில்இருந்த தடை அகலும்.

சனி-புதன் சேர்க்கை

உங்களுக்கு இருந்து வந்த அஷ்டமத்துச் சனி விலகிவிட்டது. இப்போது 9இல் இருக்கும் சனி, புதனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே தந்தை வழியில்இருந்த விரிசல்மறையும்.

## தொட்டது துலங்கும்!

மூன்று கிரகசேர்க்கை

தொழில் ஸ்தானத்தில் சூரியன், சுக்ரன், கேது வீற்றிருக்கிறார்கள். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வெளிநாடு செல் லும் வாய்ப்பு கைகூடும். ராகு-கேதுக்களின் ஆதிக்கத்திற்குள் மற்ற கிரகங்கள் இருப்பதால், சர்ப்ப சாந்தி களைச் செய்யுங்கள்.

விருச்சிக செவ்வாய்

ஜனவரி 20ஆம் திகதி விருச்சிக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் போது, பயணத்தில் கவனம் தேவை. திடீர் இடமாற்றங்கள் உருவாகலாம். சகோதர பாசம் குறையும்.




புதன் சஞ்சாரம்

ஜனவரி 22இல் மகரத்திலும், பெப்ரவரி 8இல் கும்பத்திலும் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வந்து, சுயதொழில் தொடங்கக்கூடும்.

சுக்ரன் சஞ்சாரம்

பெப்ரவரி 7ஆம் திகதி கும்பத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போவதால், எதிர்பாராத தன லாபங்கள் வந்து சேரும். சேமிப்பு உயரும். கடல் தாண்டி வரும் தகவல், மகிழ்ச்சியை வழங்கும்.

வழிபாடு

வியாழன் தோறும் குருவை வழிபடுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்


கணவரின் அன்பும், பாசமும் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக கிடைக்கும். சேமித்த பணத்தில் ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு உண்டு.

கலைத்துறை

புதிய வாய்ப்பு கள் தேடி வரும். கலை நிகழ்ச்சியின் மூலமாக பெரிய வருமானம் கிடைக்கலாம். கலைத்து றையைச் சார்ந்த சங்கங்களில் இருப்ப வர்களுக்கு முக்கியப் பொறுப்பு வந்து சேர லாம். சாதனை படைக்க சந்தர்ப்பங்கள் கூடிவரும்.

அரசியல்:- பொது சேவையில் இருப்ப வர்களுக்கு தைரியமும், செயல்திறமையும் அதிகரிக்கும். கட்சித் தலைமையிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். புதிய பொறுப்புகள் தானாக வந்து சேரும். உங்கள் செயற்பாடுகளுக்கு சமூகத்தில் நல்ல அங்கீகாரம் கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



பொதுப்பலன்

உங்களைப் பொறுத்தவரை, அதிக விரயங்கள் ஏற்படும் மாதமாகவே இது அமையப் போகிறது. அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் உள்ளதால், எதிலும் நிதானம் தேவை. புது முயற்சிகளில் ஈடுபடும்பொழுது, பிறரிடம் ஆலோசனை செய்வது, வீண் விரயங்களைத் தடுக் கும். பிறரிடம் ஒப்படைத்த காரியம், மீண்டும் உங்களிடமே வந்து சேரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது.

உத்தியோகம்

அலுவலகத்தில் பணி யாற்றுபவர்கள், தாங்கள் செய்யும் புது முயற்சிகளைப் பற்றி சக பணியாளர்களிடம் சொல்வது அவ்வளவு நல்லதல்ல. வரும் இட மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். சுயதொழில் மற்றும் கூட்டுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு, வாடிக்கையாளர் அல்லது பணியாளர்களால் தொல்லை ஏற்படலாம். விருச்சிகச் செவ்வாயின் ஆதிக்கம் வந்த பிறகு சொத்துகளை வைத்து தொழிலுக்கு மூலதனம் செய்வீர்கள். பங்குச்சந்தையில் ஈடுபட்டிருப்பவர்கள், மற்றவர்களின் பேச்சை நம்பிச் செயல்படுவதன் மூலம் சில இழப்புகளைச் சந்திக்க நேரலாம்.

உடல்நலம்

இராசிநாதன் சுக்ரன் வலிமை இழந்திருப்பதால் அடிக்கடி ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். ஆரம்பத்திலேயே மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வது நல்லது. உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ள இயலும். தசாபுத்தி பலமிழந்தவர்கள் அதற்கேற்ற வழிபாடுகளை மேற்கொள்வது அவசியமாகும்.

குடும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்க மற்றவர்களை அனுசரித்துச்செல்ல வேண்டிய நேரம் இது. ஒருசில பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கலாம். வீடு, வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபகாரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம். கடன் பிரச்சினைகளைச் சமாளிக்க, விலையுயர்ந்த பொருட்களை விற்பனை செய்ய நேரிடலாம்.




## கவனம் தேவை!

வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினை ஏற்படாமல் இருக்க ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

பணவரவு

வரவும், செலவும் சமமாகும். தனாதிபதி புதன் கும்பத்தில் சஞ்சரிக்கும் இம்மாத கடைசியில் வருமானம் திருப்தி தரும். வாங்கல்- கொடுக்கல்கள் ஒழுங்காகும். பற்றாக்குறையைச் சமாளிக்கும் ஆற்றல் உண்டு என்றாலும், ஒரு சில நேரங்களில் ஆபரணங்களை அடகு வைக்க நேரிடலாம்.

ஒன்பதில் சுக்ரன்

மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் சுக்ரன், சுகாதிபதி சூரியனுடனும், கேதுவுடனும் 9ஆம் இடத்தில் இணைந்திருக்கிறார். எனவே எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். பெப்ரவரி 7ஆம் திகதி கும்ப இராசிக்கு சுக்ரன் சென்ற பிறகு, செய்யும் முயற்சிகளில் ஓரளவு வெற்றி கிட்டும். தொழில் பங்குதாரர்களின் தொல்லை குறையும்.

விருச்சிக செவ்வாய்: ஜனவரி 20ஆம் திகதி விருச்சிகத்திற்கு செவ்வாய் செல்கிறார். செவ்வாய் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் அந்த நேரத்தில் இடம், பூமி சம்பந்தப்பட்ட வகையில் இலாபம் கிடைக்கும். வீடு, இடம் வாங்கும் யோகமும் வாய்க்கும்.

புதன் சஞ்சாரம்

ஜனவரி 22ஆம் திகதி தன பாக்கியாதிபதியான புதன், மகர ராசிக்கு செல்கிறார். பிப்ரவரி 8ஆம் திகதி மீண்டும் அவர் கும்பத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இந்தக் கால கட்டத்தில் உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கும். திருமண முயற்சிகளில் அனுகூலம் உண்டு.

வழிபாடு

சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு தீபமேற்றி வழிபடுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். கொள்கைப்பிடிப்பைத் தளர்த்திக் கொள்ள நேரிடும். விருப்பங்கள் நிறைவேற விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாய், சகோதரர்களிடம் பக்குவமாக நடந்து கொண்டால், சலுகைகளைப் பெறலாம். பணி புரியும் பெண்களுக்கு வேலைச்சுமை கூடும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறையலாம்.

கலைத்துறை

கலைஞர் களுக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். நல்ல ஒப்பந்தங்களை தேர்ந்தெடுத்தால், வாழ்வில் மகிழ்ச்சி மலரும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும். சந்தர்ப்பங்களும் சாதகமாக அமையும் மகிழ்ச்சிகர மாதம் இது.

அரசியல்

திடீரென பொறுப்புகளில் மாற்றம் ஏற்படலாம். தோழமையாக இருப் பவர்கள், உங்களுக்குச் சாதகமாகச் செயற்படுவார்கள். மதிப்பு, மரியாதையை தக்க வைத்துக் கொள்வீர்கள். தலைமையிடத்தில் இருந்த மனஸ்தாபங்கள் மறையும். சிறப்பு வழிபாடு மூலம் செயலில் வெற்றி சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாவடக்கம் இல்லாத அரசன்



(13.01.2018 தொடர்ச்சி)

"தூதுவனே! நன்றாகக் கேட்டுக் கொள். எனது நெய்தல் நாடு இன்றிலிருந்து சுதந்திர பூமி. நாங்கள் இனி யாருக்கும் கப்பம் கட்டமாட்டோம்."

"எமது அரசரின் பெருமையையும், வலிமையையும் தெரிந்தே நீங்கள் இப்படி பேசுவது மிகவும் வருந்தத்தக்கது."

"உனது கணைக்காலனுக்கு நான்தான் காலன். என்னைப் போர்க்களத்தில் வந்து சந்திக்கும்படி கூறு."

"உங்களால் எம் மன்னனை வெல்ல முடியும்என்று நீவிர் நினைப்பது உங்கள் இறுமாப்பு. எமது மன்னனின் வலிமை தெரியாமல் பேசுவது மிகவும் இரங்கத்தக்கது."

"அடே தூதுவனே! இங்கே நிற்காதே, ஓடிவிடு. இல்லையெனில் உன் முன்பற்களைத் தட்டிவிடுவேன். எச்சரிக்கை!"

தூதுவன் கணைக்கால் இரும்பொறையிடம் வந்து நடந்தவற்றை ஒன்றுவிடாமல் கூறினான்.

"தூதுவன் ஒருவனின் பற்களைத் தட்டுவேன் என்று நாவடக்கம் இல்லாமல் சொன்ன அந்த மூவனைப் போர்க்களத்தில் சந்தித்தே தீருவேன்," என்று முடிவு கட்டினான் இரும்பொறை.

"மன்னா, சிறு நரியை எதிர்க்கச் சிங்கம் செல்வதா? வேண்டாம். இது உங்கள் வீரத்திற்கு இழுக்கு.

நாவடக்கமின்றிப் பேசிய அந்த மூவனை வென்று அவன் முன்பற்களை உங்களிடம் கொண்டு வந்து காணிக்கையாக்குகிறேன்" தளபதி வீர முழக்கமிட்டான்.

"அதுவும் சரிதான். மூவன் இனி வாயைத் திறக்கும் போதெல்லாம் நாவடக்கம் வேண்டும் என்பதை உணர வேண்டும். அவன் முன்பற்களைக் கொண்டு வருவது தான் நன்று!"

"சரி மன்னா, அப்படியே செய்கிறேன்."

"தளபதியாரே, மூவனின் முன்பற்களைப் பிடுங்கி நம் தொண்டிக் கோட்டையின் வாயிற் கதவுகளில் பொருத்தி, "யாகாவாராயினும் நாகாக்க. நாவைக் காக்காத மூவனின் பற்களைப் பாரீர்!' என்று அதன் கீழ் எழுதி வையுங்கள்."

"உத்தரவு மன்னா!"

கணைக்கால் இரும்பொறையின் படைவீரர்கள் அவனை விரட்டிப் பிடித்து தளபதியிடம் கொண்டு வந்தனர்.

நாவடக்கமின்றிப் பேசிய மூவனின் முன் பற்கள் தட்டப்பட்டன.

மன்னன் கூறியவாறே அவை தொண்டிக் கோட்டையின் வாயிற் கதவில் பதிக்கப்பட்டன.

சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் மூவன் தன் செயலுக்காக வருந்தினான், தன் நாவடக்கமற்ற செயலால் தனக்கும் தன் நாட்டுக்கும் தீராத அவமானம் தேடியதை நினைத்து நினைத்து சேரநாட்டுச்சிறையிலிருந்தே உயிர்விட்டான்.

குழந்தைகளே! வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி பிறருடைய மனதைப் புண்படுத்தாமல் இருக்க மூவனுக்கு ஏற்பட்ட நிலை ஒரு நல்ல பாடம்.

(முற்றும்)




- ❖1559- முதலாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடி சூடினாள்.
- ❖1582-லிவோனியா மற்றும் எஸ்தோனியாவை ரஷ்யா போலந்திடம் கையளித்தது.
- ❖1609- உலகின் ஆரம்பகால செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான Avisa Relation oder Zeitung, ஜேர்மனியில் வெளியிடப்பட்டது.
- ❖1759- பிரித்தானிய அருங்காட்சியகம் திறக்கப்பட்டது.
- ❖1777- அமெரிக்கப் புரட்சிப் போர்: வெர்மொண்ட் விடுதலையை அறிவித்தது.
- ❖1799- இலங்கையில் அடிமைகள் கொண்டு வரப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டது.
- ❖1892- ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப்பந்து விளையாட்டு விதிகளை உருவாக்கினார்.
- ❖1908-யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்கும் இடையில் பயணிகள் படகுச் சேவை (ferry) ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1943- பென்டகன் திறக்கப்பட்டது.
- ❖1969- சோயூஸ் 5 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் விண்ணுக்கு ஏவியது.
- ❖1970- முவம்மர் அல்-கடாபி லிபியாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ❖1975- போர்த்துக்கல் அங்கோலாவுக்கு விடுதலை வழங்கியது.
- ❖1973- வியட்நாம் போர்: வடக்கு வியட்நாம் மீதான தாக்குதல்களை இடை நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் அறிவித்தார்.
- ❖1977- சுவீடனில் இடம்பெற்ற விமான விபத்தில் 22 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖2001- விக்கிப்பீடியா தொடங்கப்பட்டது.
- ❖2005- செல்பேசிகளில் தமிழ் குறுஞ் செய்திகளை அனுப்பும் செல்லினம் என்ற மென்பொருள் மலேசியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖2007- சதாம் உசேனின்சகோதரர் பர்சான் இப்ராகிம், மற்றும் ஈராக்கின் முன்னாள் பிரதம நீதியரசர் அவாத் ஹமீட் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

**பிறப்புகள்**

- ❖1622-மொலியர், பிரான்சிய நடிகர் (இ. 1673)
- ❖1908- எட்வர்ட் டெல்லர், அங்கேரிய-அமெரிக்க இயற்பியலாளர் (இ. 2003)
- ❖1916- இராஜ அரியரத்தினம், ஈழத்துப் பத்திரிகையாளர், எழுத்தாளர் (இ. 1998)
- ❖1917- கே. ஏ. தங்கவேலு, தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 1994)
- ❖1918- ஜமால் அப்துல் நாசிர், எகிப்தின் 2வது அரசுத்தலைவர் (இ. 1970)
- ❖1922- ம. மு. உவைஸ், இலங்கையின் இசுலாமியத் தமிழறிஞர் (இ. 1922)
- ❖1923- ருக்மணிதேவி, இலங்கை நடிகை, பாடகி (இ. 1978)
- ❖1926- காசாபா தாதாசாகேப் சாதவ், இந்திய ஒலிம்பிக் வீரர் (இ. 1984)
- ❖1929- மார்ட்டின் லூதர் கிங், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கச் செயற்பாட்டாளர் (இ. 1968)
- ❖1965-ஜேம்ஸ் நெஸ்பிட், வட அயர்லாந்து நடிகர்
- ❖1982-நீல் நிதின் முகேஷ், இந்திய நடிகர், பாடகர்
- ❖1984- விக்டோர் ரசுக், அமெரிக்க நடிகர்

**இறப்புகள்**

- ❖1965- சுப்பையா நடேசபிள்ளை, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1895)
- ❖1965- தஞ்சை இராமையாதாஸ், தமிழகக் கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர் (பி. 1914)
- ❖1981- தேவநேயப் பாவாணர், தமிழறிஞர் (பி. 1902)
- ❖1994- தெ. வ. இராசரத்தினம், இலங்கைத் தமிழ் நீதிபதி, அரசியல்வாதி (பி. 1920)
- ❖1999- மீ. ப. சோமு, தமிழக எழுத்தாளர் (பி. 1921)
- ❖2012- ஓமாயி வியாரவாலா, இந்தியாவின் முதல் பெண் புகைப்பட நிருபர் (பி. 1913)

**சிறப்பு நாள்**

- ❖மர நாள்
- ❖இந்திய இராணுவ நாள்
- ❖யோன் சிலம்புவே நாள் (மலாவி)
- ❖விக்கிப்பீடியா நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 65 |
| பச்சைமிளகாய் | 100 | 250 | 200 | 140 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 | 35 |
| கோவா | 80 | 100 | 80 | 50 |
| கரட் | 120 | 180 | 200 | 100 |
| பூசணி | 60 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | — | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 60 | 100 | 75 |
| சின்ன வெங்காயம் | 100 | 180 | 200 | 260 |
| பெரிய வெங்காயம் | 200 | 100 | 140 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 280 | 220 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 180 | 100 | 200 |
| லீக்ஸ் | 200 | — | 240 | 220 |
| பீற்றூட் | 200 | 150 | 160 | 140 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | — | 1200 | - | — |
| போஞ்சி | 200 | 200 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 80 | 80 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 20 | 100 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 75 | 90 |
| இராசவள்ளி | 100 | 150 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 100 | 280 | — | 240 |
| முள்ளங்கி | 100 | 70 | 80 | — |
| பொன்னாங்காணி | 100 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 60 |
| ஈரப்பலா | 20 | 50 | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா என்று அலற ஆ உயிரைக் கொன்றவர்க்கு இம்மாநிலத்தில் இரக்கமுண்டோ சொல்லும் அம்மா...

~ ஓர் கவிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பசு மாட்டைக் கொல்லும் பாவம் சும்மா விடாது

இன்று பட்டிப்பொங்கல். உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருந்த சூரியபகவானுக்கு நேற்றைய தினம் பொங்கல் செய்து தங்கள் நன்றியைத் தெரிவித்த விவசாயிகள்,

இன்று தங்களுக்குப் பேருதவி புரிந்த எருதுகளுக்கும் பசுக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக பட்டிப்பொங்கல் செய்கின்றனர்.

நிலத்தை உழுது பயிரிடுவதற்கும் விவசாய உள்ளீடுகளையும் விளைபொருட்களையும் ஏற்றி இறக்குவதற்கும் உதவி புரிந்த எருதுகளுக்கும் பாலைப் பொழிந்து நம் ஆரோக்கியத்துக்குப் பேருதவி செய்வதுடன் எருவைப் பசளையாகத் தந்த பசுக்களுக்கும் நன்றி செலுத்துவதாகப் பட்டிப்பொங்கல் நிகழ்வு அமைகின்றது.

பெற்ற தாய்க்கு அடுத்த படியாக நமக்குப் பால் தரும் பசுக்களைத் தெய்வமாகப் போற்றும் மிக உயர்ந்த பண்பாடு நம் தமிழினத்துக்கு உண்டு.

அம்மா என்ற தமிழின் அகரத்தையே பசுக்களும் உச்சரிக்கின்றன. இந்த உலகப் பிரபஞ்சத்தில் அம்மா என்ற ஓசையுடன் கத்துகின்ற பசுக்கள் தாயாக இருந்து பாலைத் தருவதால் தாய்க்கு இணையாக பசுக்களைப் போற்றுகின்ற மரபு நம் வாழ்வியலில் பேணப்படுகின்றது.

எனினும் இன்றைய அந்தரமான சூழ்நிலையில் பசுக்களை வெட்டிக் கொன்று அதன் இறைச்சியைப் புசிக்கும் கொடூரம் நம் தமிழ் மண்ணில் நடந்தேறுவது வேதனைக்குரியது.

ஒரு பசுவை வெட்டி இறைச்சியாக்குவதென்பது பெற்ற தாயை வெட்டிப் புதைப்பதற்கு ஒப்பானது.

எனினும் பசு வதையைத் தடுப்பதற்கு பசுக்களை இறைச்சிக்காக வெட்டுவதற்குமான தடைகள் சட்டரீதியாக ஏற்படுத்தப்படாமையால் இன்று வரை பசுக்கள் களவாகவும் சட்டரீதியாகவும் இறைச்சியாக்கப்படுகின்றன.

இத்தகைய செயல் இந்த நாட்டில் மிகப் பெரிய தோசத்தையும் பாவத்தையும் ஏற்படுத்த வல்லது என்பதை உணர்வது அவசியம்.

பசு வதையை எதிர்த்து போராடிய நம் சைவப் பெரு வள்ளல்கள் வாழ்ந்த இந்தச் சிவபூமியில் பசுவதை நிறுத்தப்பட வேண்டும்.

ஆனால் நேற்றைய தைப்பொங்கல் திருநாளில் கூட, நம் மண்ணில் மாட்டிறைச்சிக் கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடந்தது எனில்,

எங்கள் பண்பாட்டுக்கும் செயலுக்குமான தொடர்பு என்ன? என்ற கேள்வி எழவே செய்யும்.

எனவே பசுவதையை முற்றாக நிறுத்துவதற்கும் பசுக்களை இறைச்சிக்காக வெட்டுவதை அடியோடு தடுப்பதற்கும் அறம் காக்க வல்லவர்கள் முன்வரவேண்டும்.

இதைச் செய்யத் தவறுகின்றபோது, வெட்டப்படும் பசுக்கள் அம்மா என்று அவலக்குரல் எழுப்பி உயிர்விடும் பாவம் யாரையும் சும்மா விடாது என்பதையேனும் இன்றைய பட்டிப் பொங்கல் திருநாளில் உணர்ந்து கொண்டால் அதுவே பெரிய மாற்றமாகும்.

சுதுமலை முருகன்

### தேவஸ்தானத்தின் கோபூஜை நிகழ்வு

சுதுமலை ஸ்ரீ முருக மூர்த்தி தேவஸ்தானத்தின் கோபூஜை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிப 2.00 மணி முதல் நடைபெற உள்ளது

இந்நிகழ்விற்கு இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம)

### பட்டிப்பொங்கல்; கோமாதா உற்சவம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பட்டிப்பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சமய நிறுவனங்களின் இணையத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும். கோபவனியும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய கால்நடை அமைச்சர் க.சிவநேசன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் சி.வசீகரன், யாழ் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ்.சுதர்சன், அரிமாக் கழக 3061 முன்னாள் ஆளுநர் லயன் வைத்திய கலாநிதி தியாகராஜா எம்.ஜி.எவ் ஆகியோர கலந்துகொள்வர்(மு-7,78)

# மன்னார் எருக்கலம்பிட்டியில் 2 கிலோ கேரளக் கஞ்சா சிக்கியது

(மல்லாவி )

மன்னார் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள எருக்கலம்பிட்டி பேருந்து நிலையத்தில் வைத்து அநுராதபுரத்திற்கு கடத்திச் செல்லப்பட இருந்த சுமார் 02 இலட்சம் ரூபாய் பெறுமதியான 02 கிலோவும் 55 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் அநுராதபுரம் தமுத்தே கம பகுதியைச் சேர்ந்த சுமார் 35, வயதுடைய இளைஞரை மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 09 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையேயான நேரப் பகுதயில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சிரந்த பீரிஸ் மற்றும் மன்னார் மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எதிரிசிங்க ஆகியோரின் வழிகாட்டுதலின்படி மன்னார் மாவட்ட போதைப்பொருள தடுப்பு பிரிவு பொலிஸ பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் நவரணா தலைமையில் சென்ற பொலிஸ் அணியினரே கேரளக் கஞ்சாப் பொதியைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், கைதான சந்தேகநபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் இன்று திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக மன்னரர் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-15,281)

## திருநெல்வேலி பரமேஸ்வராவின் நூற்றாண்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நாளை 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் யோக. தயாளன் தலைமையில் காலை, மாலை என இரண்டு அமர்வுகளாக நடைபெறும்.

காலை அமர்வில் மாணவர்களின் நடைபவனி இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசனும் கௌரவ விருந்தினராக திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் தி.ஸ்ரீமோகன் ராஜுவும் கலந்து கொள்வர்.

மாலை அமர்வு திருநெல்வேலி சிவகாமி மஹாலில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கல்வி அமைச்சின் செய லாளர் இ.இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் திருநெல் வேலி சிவகாமி மஹால் இயக்குநர் த.பசீர் கௌரவ விருந் தினராகவும் கலந்துகொள்வர். (மு)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பெற்றோர்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக வாழ்வது எப்படி?**

இவ்விதமாக காலாகாலத்தில் குழந்தைகளுக்குத் தேவையான கட்டுப்பாடுகளை விதித்து அன்பு செலுத்தி வளர்க்கப்படும் குழந்தைகள் ஒரு போதும் பெற்றோர்களுக்குத் தீமை செய்ய மாட்டார்கள். அவர்கள் சந்தோசத்துடன் பெற்றோர்களையும் முதியவர்களையும் ஆசிரியர்களையும் மதிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பெற்றோர்கள் எப்போதும் பொருள் ஈட்டுவதில் மட்டும் கவனம் செலுத்தி குழந்தைகளிடம் பழகினால் பெற்றோர்களிடம் அவர்களுக்கு மதிப்பு தோன்றாது.

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். அதைச் செய், இதைச் செய், இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று கூறிக் கொண்டிருக்காமல் நாமே செய்து காட்டுவதுதான் நல்லது. அதைப்பார்த்து அவர்கள் கற்றுக்கொள்வார்கள். முறையாக வளர்க்கப்படும் குழந்தை தீயவழியில் செல்ல வாய்ப்பில்லை. அதையும் மீறி அவர்கள் தீய வழியில் சென்றால் அது அவர்களின் முன்ஜென்மப்படி நடப்பதாகும். அதில் குற்றம் காண்பதில் அர்த்தமில்லை. விதிக்கேற்றவாறு நடந்து கொள்வதுதான் புத்திசாலித்தனமாகும். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில புளிதறித்த புளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு கிராமம், கணேசபுரம் கிராமம், நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரை, நெளுக்குளம் தொழில் நுட்பக கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பறயனாலங்குளத்திலிருந்து தலை மன்னார்வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், அடம்பன் நீர்ப்பாசன சபை, கமலாம் பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற் பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்திய சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, ரைமெக்ஸ் கார்மென்ட், விசேட அதிர டிப்படை முகாம், எருக்கலம் பிட்டி பம்கவுஸ், பேசாலை Palmayrah House, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழி ற்சாலை, மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென்ஐஸ்தொழிற்சாலை, தலைமன்னார் வைத்திய சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## எண்ணப் பதிவு



ஒரு எண்ணம் ஒருமுறை மனதில் தோன்றிவிட்டால் போதும். அது உயிரணுக்களில் பதிவாகி, அவற்றுக்கிடையே பிரதிபலித்து, அந்தப் பிரதிபலிப்பு மீண்டும் பதிவு, மீண்டும் பிரதிபலிப்பு என்றாகி அந்த எண்ணம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருக்கும். இதுவும் எண்ணத்தின் இயற்கை. எனவே, ஒரு தீய எண்ணத்தை ஒருமுறை உள்ளே விட்டு விட்டால்போதும், மறுபடியும் உதிக்காமல் செய்வது அத்தனை எளிதன்று.

விருந்தாளி - வேண்டாத விருந்தாளியேயாயினும் முகத்தைச் சுளித்தால் போய்விடுவார். எண்ணத்தை விரட்ட விரட்டத்தான் மீண்டும் மீண்டும் வரும். விரட்டும் போது நீங்கள் அந்த எண்ணத்தோடு தான் உறவு கொண்டவாறே இருக்கிறீர்கள் என்பதே இதற்குக் காரணம்.

அதுமட்டும் அன்று. வெறும் எண்ணம் மட்டுந்தானே, நான் என்ன செயலிலா இறங்குகிறேன்? என்று ஒரு தீய எண்ணத்திற்கு இடங்கொடுத்து விடக்கூடாது. விளைவஞ்சி, அந்த எண்ணத்தின் வழி நீங்கள் செயலில் இறங்காமல் இருந்துவிட்டால் அந்த எண்ணம் சும்மா போய்விடாது. ஒத்த தரம் உடைய இன்னொருவர் மனதில் நுழைந்து அது தனக்குச் செயலுருவம் கொடுத்துக் கொண்டு விடும். அத்தகு ஆற்றல் பெற்றது எண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி முடிவுகள்





சமரபாகு நியூட்டன் விளை யாட்டுக்கழகம் வடமராட்சி உதை பந்தாட்ட லீக்கின் அனுசரணை யில், வடமராட்சியின் சிறந்தவன் என்ற தொனிப்பொருளில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

இதில் மொத்தமாக 40 அணிகள் பங்குபற்றியிருந்தன. முதற் சுற்று ஆட்டங்கள் விலகல் முறை யில் இடம்பெற்று, அதிலிருந்து 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்கிடையில் லீக் முறையில் ஆட்டங்கள் இடம்பெறுகின்றன.

அந்தவகையில் நவிண்டில் கலைமதி ஏ, கரணவாய் கொலின்ஸ், அண்ணாசிலையடி இளைஞர், வதிரி டயமன்ஸ், நவிண்டில் கலைமதி பி, கம்பர்மலை யங்கம்பன்ஸ், பலாலி விண்மீன் மற்றும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் ஏ அணி ஆகிய 8 அணிகளும் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

11 ஆம் திகதி நடைபெற்ற லீக் போட்டியில் கம்பர்மலையங்கம் பன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. முதற் பாதியாட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் விண்மீன் அணியின் விதுசன் முதல் கோலைப் பதிவு செய்தார். 15 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியின் பிரகாஸ் கோல் ஒன்றைப் பதிவு செய்தார். முதற்பாதியாட்டம் 1:1 என சம நிலையில் முடிவடைந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் மேலதிகமாக எந்தக் கோல்களும் பதிவு செய்யப்படவில்லை. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது போட்டியில் நவிண்டில் கலைமதி பி அணியும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியும் மோதவிருந்தன. எனினும், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி வருகை தராமையால், கலைமதி பி அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (க-26)

# மன்னார் சவேரியாரின் மாபெரும் மரதன் ஓட்டம்



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 2018 ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்ட போட்டி கடந்த சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் தலைமன்னார்-மன்னார் பிரதான வீதியில் ஆரம்பமாகி நடை பெற்றது.

பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் இடம் பெற்ற குறித்த மரதன் ஓட்டப் போட்டியினை விருந்தினராக கலந்து கொண்ட மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து குறித்த மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமானது. குறித்த போட்டியில் சுமார் 500 மாணவர்கள் கலந்து கொண்டியிருந்தனர்.

1 ஆம் இடத்தை கிசோவன், 2 ஆம் இடத்தை யூட் கிரின்டிசன், 3 ஆம் இடத்தை டிபிசன் ஆகிய மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

மரதன் ஓட்ட போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு ஆதரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-281)

# மன்னார் அல். அஸ்ஹர் பாடசாலையின் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி



மன்னார் அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையின் 2018 ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 6.50 மணியளவில் பாடசாலைக்கு முன் ஆரம்பமானது.

பாடசாலையின் அதிபர் எம். வை. மாஹிர் தலைமையில் குறித்த மரதன் ஓட்ட போட்டி இடம்பெற்றது.

குறித்த போட்டியானது 12 தொடக்கம் 16 வயது பிரிவினருக்கும், 18 தொடக்கம் 20 வயது பிரிவினருக்கும் என இரு பிரிவுகளாக இடம் பெற்றது.

12 தொடக்கம் 16 வயது பிரிவில் முதலாம் இடத்தை சம்ஸ் இல்ல மாணவன் எஸ். சப்ரின், 2 ஆம் இடத்தை சம்ஸ் இல்ல மாணவன் எம்.ஏ.ஆத்திப், 3 ஆம் இடத்தை தாஜ் இல்ல மாணவன் எம்.ஏ.அர்ஹம் அஹமட் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

18 தொடக்கம் 20 வயது பிரிவில் 1 ஆம் இடத்தினை சிறாஜ் இல்ல மாணவன் எம்.முஜாஹீத், 2 ஆம் இடத்தினை சம்ஸ் இல்ல மாணவன் என்.எம்.அகீல் , 3 ஆம் இடத்தினை சம்ஸ் இல்ல மாணவன் ஏ.ஜெயபிரதாப் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

குறித்த மரதன் ஓட்டப் போட்டியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-281)

# இளையோருக்கான கிரிக்கெட் இலங்கை அணி அபாரம்




19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்தில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடந்து வருகிறது.

நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை- அயர்லாந்து அணிகள் மோதின.


நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

இதன்படி களமிறங்கிய அயர்லாந்து அணி 48 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 207 ஓட்டங்கள் பெற்றது.

208 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி, அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

லக்ஷன் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், கமிந்து மெண்டிஸ் 74 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்ட நாயகனாக லக்ஷன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு புதிய கூடைப்பந்தாட்ட திடல்





யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத் திடல் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த கூடைப்பந்தாட்ட மைதானத்தை அமைக்கும் பணி 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி, சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மெல்பேர்ன் பழைய மாணவர் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது.



தொடர்ந்து இதன் கட்டுமானப் பணிக்கு, சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அனைத்து பழைய மாணவர் சங்கங்களும் மற்றும் வடமாகாண சபையும் பங்களித்திருந்தது.

சுமார் 8 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த கூடைப்பந்தாட்ட திடல், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவால் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழாவின் போது, பாடசாலையின் பழைய மாணவர்கள் அணிக்கும், தற்போதுள்ள மாணவர்கள் அணிக்கும் இடையில் கண்காட்சி போட்டியொன்றும் நடைபெற்றது. (க-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லையில் நடைபெற்ற பட்டத்திருவிழாவின் போது...


## உறங்கச் சென்ற...

மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று யாழில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியை சேர்ந்த தங்கவேலு ரகுமான் (வயது 30) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் யாழில் உள்ள உணவகம் ஒன்றில் கடமையாற்றி வருகிறார். திருமணமாகி ஒரு வருடங்களே ஆகின்ற நிலையில், நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் உணவு அருந்திவிட்டு வீட்டுக்கு சென்று உறங்கியுள்ளார்.

நேற்று காலை 6.30 மணிக்கு அவரது மனைவி குறித்த நபரை படுக்கையில் இருந்து எழுப்பும் போது அவர் பேச்சு மூச்சின்றி கிடந்துள்ளார். உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இறப்புக்கான காரணம் இதுவரை தெரியப்படுத்தவில்லை என்பதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது மேற்குறித்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)

## மகிந்த அணிக்கு...

ந்திரக் கட்சியல்லாது வேறு கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு கூறுவது நகைப்புக்கிடமானதாகும் என்றும் மனச்சாட்சிக்கேற்ப அரசியலில் ஈடுபடுமாறு தாம் அவர்களுக்கு கூறுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று பிற்பகல் ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள அக்கட்சியின் செயலாளரும் தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் கடந்த அரசாங்கத்தில் உயர்பதவிகளை வகித்தவர்களாகவும் உள்ளனர். இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு அவர்கள் மேற்கொண்டு வருகின்ற விடயம் இரண்டாவது பண்டாரநாயக்க படுகொலையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று தமது அரசியல் அலுவலகங்களுக்கு பண்டாரநாயக்கவினதும் அம்மையாரினதும் உருவப்படங்களை அவசியமாக கருதுகின்றவர்கள் அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போதும் ஏனைய நிகழ்ச்சிகளின்போதும் பண்டாரநாயக்க அவர்களை நினைவு கூருமாறு நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயத்தை கட்சியின் முன்னாள் தலைவர்களை நினைவு கூருதல் என்று மாற்றுவதற்கு ஆலோசனை வழங்கியவர்களாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சராக இருந்தபோது நாட்டு மக்களுக்காக மேற்கொண்ட தீர்மானங்களின் காரணமாக புகையிலைக் கம்பனிகள் உள்ளிட்ட பல்தேசிய கம்பனிகள் தம்முடன் கோபித்துக் கொண்டதாகவும் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக போதைப்பொருள் வியாபாரிகள் தம்மை எதிரியாக ஆக்கிக்கொண்டனர் என்றும் இன்று ஊழல் மோசடிக்கு எதிராக ஆணைக்குழுக்களை அமைத்து வருவதும் இலகுவான விடயமல்ல என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எனினும் இந்நாட்டு மக்கள் தன்னுடன் இருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த மக்கள் நம்பிக்கையுடன் நாட்டுக்காக முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ந்தும முன்னெடுப்பதாக அவர் குறிப்பிட்டார்.(மு-1)

# அந்தமானிலும் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.8ஆக பதிவு

(கொழும்பு)

அந்தமான் தீவுகளில் இலேசான நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.8 ஆக பதிவாகியுள்ளது. நேற்றிரவு 9.18 மணியளவில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் வீடுகள் அதிர்ந்ததால், மக்கள் பீதி அடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக இன்று அதிகாலை வரை எந்த தகவலும் இல்லை. (மு-1)

## யாழ்.வந்த ஜேர்மன்...

துள்ளார்.

ஜேர்மன் நாட்டில் வசித்து வந்த இவர்கள் யாழ்ப்பாணத்தை சுற்றிப்பார்ப்பதற்கு கடந்த 7ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி குறித்த நபர் மூச்சு விடுவதற்கு கடினமாக இருப்பதாக கூறி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். மேலதிக சிகிச்சைக்காக அன்றைய தினமே குறித்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)

## ஜனாதிபதியும் பிரதம...

சர்சைக்குரிய பிணைமுறி சம்பவத்தில் தவறு இடம்பெற்றிருக்குமாயின் அதன்பொருட்டு தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெயங்கோட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் அதன் முன்னாள் ஆளுநர் உடனே வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

நிதி அமைச்சரும் பதிவியிலிருந்து நீக்கப்பட்டார்.

என்றாலும் மகிந்த ராஜபக்ஷ காலத்தில் அவ்வாறு ஒரு தண்டனையும் வழங்கப்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷவும் பல பில்லியன் கணக்கில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார்.

அது தொடர்பில் தற்போது குற்றப்புலனாய்வு பிரிவினால் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக சந்திரிகா மேலும் குறிப்பிட்டார்.(மு)

# அரசாங்க ஊழியர்களுக்கு புது வருடத்தில் அதிர்ச்சி!

(கொழும்பு)

5 வருடங்கள் நிறைவடையும் வரை அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படாதென அரசாங்கம் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சமகால அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தவுடன் அரசாங்க ஊழியர்களுக்கு 10 ஆயிரம ரூபாய் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

அதிகரித்த பத்தாயிரம் ரூபாயை அடிப்படை சம்பளத்துடன் 2500 ரூபாய் என்ற கணக்கில் 4 வருடங்களுக்கு இணைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேலும் சம்பள அதிகரிப்பு குறித்து பேச வேண்டாம் என அரசாங்கத்தின் பிரபலங்கள் அறிவித்துள்ளதாக குறித்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இதுவரையில் அரசாங்கம் வருமானத்தை அதிகரித்து கொள்வதற்காக பாரியளவில் வரி அறவிட்டு வருகின்றது. வரி காரணமாக அரசாங்கத்தில் குறைந்த சம்பளத்தை பெறுபவர்களுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

2015இல் அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் இன்றைய காலக்கட்டத்தில் வாழ்வதற்கு போதுமானதாக இல்லை என அரசாங்க ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ள தொலைபேசி உட்பட அனைத்திற்குமான கட்டணங்கள் காரணமாக அரசாங்க ஊழியர்கள் மிகவும் கடினமான வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து வருவதாக குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (மு-1)

# இலங்கையின் பொருளாதாரம் ஐந்து வீதத்தால் அதிகரிக்கும்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 5 வீதத்தால் அதிகரிக்கும் என உலக வங்கி சமீபத்தில் வெளியிட்ட பொருளாதார கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் தெற்காசியா 6.9% வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளதுடன், நுகர்வு வலுவாக இருக்கும் அதேவேளை முதலீடுகள் நல்ல நிலையில் இருக்கும் எனவும் குறித்த கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டுகளில் 7.3% வளர்ச்சியை இந்தியா அடையலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன் அவ்வளர்ச்சி 2019 -2020 ஆம் ஆண்டுகளில் 7.5% ஆக உயரலாம் எனவும் குறித்த கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் தனியார் துறையின் பொருட்கள் மற்றும் சேவைகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் தனியார் துறை முதலீட்டு வருமானத்தை அதிகரிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இப்பிராந்தியத்தில் இந்தியாவை தவிர்ந்த ஏனைய நாடுகள் 2018ஆம் ஆண்டில் 5.8% ஆகவும் 2019ஆம் ஆண்டில் 5.9% ஆகவும் வளர்ச்சியடையலாம் என்பதுடன், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான 5.8% ஆலும், பங்களாதேஷ் 6.7% ஆலும் வளர்ச்சியடையும் என குறிப்பிட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் வலுவான தனிப்பட்ட நுகர்வு மற்றும் முதலீட்டு வளர்ச்சியை அடையும் இலங்கை, 5% வளர்ச்சி வேகத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுவதாக குறித்த கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது. (மு-1)

# போஸ்ரர்களை கண்டுகொள்ளாத பொலிஸார்-ஒட்டுசுட்டானில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருடைய எண்ணுக்கணக்கற்ற போஸ்ரர்கள் ஒட்டுசுட்டான் நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக போஸ்ரர்கள் ஒட்டப்பட்டால் அவர்களை கைது செய்யவும் ஒட்டவிடாது தடுக்கவும் மீறி ஒட்டினால் அதனை அகற்றவும் விசேடமாக பொலிஸார் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இருப்பினும் ஒட்டுசுட்டான் நகர்ப்பகுதியில் பல இடங்களிலும் குறிப்பாக பாடசாலை நுழைவாயில், வைத்தியசாலை நுழைவாயில், பேருந்து தரிப்பிடம், வீதியோரம் உள்ள பாலங்கள் என எண்ணற்ற போஸ்ரர்கள் ஒட்டப்பட்டுள்ளன

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றருக்கும் 1000 மீற்றருக்கும் இடைப்பட்ட பகுதியில் இவை ஒட்டப்பட்டும் இந்த செய்தி வெளியாகும் வரை அவை அகற்றப்படவில்லை. இதற்கு அருகில் பொலிஸார் வீதி சோதனையில் ஈடுபட்டும் இவை அகற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.(மு-281)

# இன்று அரச விடுமுறையல்ல!

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை தினம் என வெளியாகும் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லையென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமையான நேற்று தைப் பொங்கல் விடுமுறை தினம் வந்தமையினால், இன்றைய தினம் அரச விடுமுறை தினம் என சிலர் கதைகளைப் பரப்பி வருகின்றனர். இதில் எந்தவொரு உண்மையும் இல்லையென கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இன்றையதினம் அரச விடுமுறை தினம் அல்லவென தெரிவித்துள்ளது. (மு-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபானம் தொடர்...

இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

மதுபான நிலையங்கள் திறந்திருக்கும் நேரங்கள் நீடிப்பு, மதுபானங்களை பெண்கள் கொள்வனவு செய்வது தொடர்பிலும் மதுபானசாலைகளில் பெண்கள் கடமையாற்றுவது தொடர்பிலும் கடந்த வாரம் வர்த்தமானியொன்று வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மதுபானசாலைகளை முற்பகல் 08 மணி முதல் இரவு 10 மணி வரை திறக்க அனுமதி வழங்கியும், பெண்களுக்கு மதுபானங்களை கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவது தொடர்பாகவும் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு நிதி அமைச்சுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதன்படி இன்று தொடக்கம் அந்த சுற்று நிருபம் இரத்து செய்யப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் நீதியான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு தாம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி கடந்த மூன்று வருடங்களில் இதற்காக பல அர்ப்பணிப்புக்களைச் செய்ததாகவும் தெரிவித்தார்.

இன்று நாட்டில் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்துடன் கூடிய ஆட்சியொன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த சுதந்திரத்தை மனிதாபிமானத்திற்குட்பட்ட வகையில் அனுபவிக்க வேண்டும் என்றும் சிலர் அந்த சுதந்திரத்தை இல்லாமற் செய்வதற்கு வழியமைப்பதாகவும் குறிப்பிட்டார்.

நீதியான சமூகம் குறித்து பேசுவதைப் போன்று நீதியான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு தாம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, வாகன விபத்து ஒன்று தொடர்பில் தனது சகோதரர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் தாம் பொலிஸாருடன் அது தொடர்பாக எதுவுமே பேசவில்லை எனக் குறிப்பிட்டதுடன், நாட்டின் வரலாற்றில் ஜனாதிபதி, பிரதமர் அல்லது அமைச்சர் ஒருவரின் சகோதரர் ஒருவர் வாகன விபத்து தொடர்பில் சிறை செல்ல வேண்டி ஏற்பட்டது என்று இருந்தால் அது தமது சகோதரர் மட்டுமே என குறிப்பிட்டார்.

மக்கள் எதிர்பார்க்கின்ற நீதியான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு தான் அனைவருக்கும் ஒரே கொள்கையையே பின்பற்றுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, ஊழல் மோசடிகளை ஒழித்துக் கட்டுவதில் கட்சி, நிறம் என்ற எந்தவொன்றும் தமக்கு முக்கியமானவை அல்ல என்றும் குறிப்பிட்டார். (மு-1)

## அடுத்த வாரம் இல...

ப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியேங் லு மற்றும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோ விடேடோ ஆகியோரே இலங்கை வரவுள்ளனர்.

சிங்கப்பூர் பிரதமர் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கை வரவுள்ளதுடன், இந்தோனேசிய ஜனாதிபதி எதிர்வரும் 25ஆம் திகதி வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்புக்கு அமைய இந்த அரச தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இலங்கைக்கு வருகைதரும் இந்த அரச தலைவர்கள் இருத்தரப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

சிங்கப்பூர் பிரதமரின் விஜயத்தின் போது, இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது.

இதனிடையே இலங்கைக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள லத்வியா ஜனாதிபதி ரைமன்டிஸ் வேயோனிஸ், நாளை நாட்டில் இருந்து புறப்பட்டுச் செல்ல உள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (மு-1)

## "தமிழர்களால் பெரு...

ன்றனர்.

இந்நிலையில் இங்கிலாந்து பிரதமர் தெரசா மே பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளமை அனைவரையும் கவர்ந்துள்ளது.

தெரசா மே தனது டுவிட்டர் பக்கத்தில் பொங்கல் வாழ்த்து சொல்லும் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது,

அவர் பேச தொடங்க முன் தமிழில் வணக்கம் என்று சொல்கிறார். அதனைத் தொடர்ந்து இங்கிலாந்து மற்றும் உலக முழுவதிலும் உள்ள தமிழர்களுக்கு பொங்கல் வாழ்த்துக்கள். இங்கிலாந்து வளர்ச்சிக்கு தமி ழர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். தமிழர்களால் தாங்கள் பெருமைபடுகிறோம். இந்த 2018-ம் ஆண்டு அவர்களுக்கு சிறப்பாக அமையட்டும். இவ் வாறு வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### நாமலின் வாழ்த்து

இதேவேளை உலகெங்கிலும் உள்ள அனைத்து தமிழ் மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் தமிழில் தனது வாழ்த்துக்களை பதிவிட்டுள்ளார்.

"தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகைத் திருநாளில் இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து உறவுகளுக்கும் என் அன்பான பொங்கல் நல் வாழ்த்துக்கள். இந்த பொங்கல் இலங்கை மக்களை சகோதர அன்பில் பிணைத்து, நம் நாட்டின் ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைய ஊக்குவிக்கட்டும்." என பதிவிட்டுள்ளார். (மு)

## வல்வை. பட்டத்திரு...

யில் பட்டத்திருவிழா நேற்று நடத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்தினால் பட்டத்திருவிழா 2018 நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வருடாந்த பட்டத்திருவிழாவைக் கண்டு களிப்பதற்காக வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் பல்வேறு வடிவங்களைக் கொண்ட 68 வகையான விசித்திர பட்டங்கள் பறக்கவிடப்பட்டிருந்தது. (மு-19-60-78)

## வவுனியாவில் கார்...

கிறது. 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே இதன்போது உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் இருந்து புகையிரத நிலைய வீதி ஊடாக வைரவப்புளியங்குளம் நோக்கி பயணித்த மோட்டார் கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.20 அளவில் வீதியின் அருகாமையில் இருந்த கற்குவியலிலும் மற்றும் கம்பத்துடனும் மோதுண்டு விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த மோட்டார் காரில் 4 பேர் பயணித்த நிலையில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் மேலும 3 படுகாயமடைந்த நிலையில் வீதியால் சென்ற பொது மக்களினாலும் மற்றும் பொலிஸாரினாலும் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்துச் சம்பவத்தின் போது இல. 36/1, புகையிரத நிலைய வீதி வைரவப்புளியங்குளம் வவுனியாவைச் சேர்ந்த இராஜேந்திரன் - பிரபாத் (வயது 21) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்,

மேலும் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை வேளையில் கணேசபுரம் வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த சந்திரகுமார் - சாந்தப் பிரகாஸ் (வயது 20) என்ற இளைஞனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்,

இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்த நிலையில், ஒயார் சின்னக்குளம் வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த எம்.விதுசன் (வயது 20) என்பவரும்,சாஸ்திரி கூமாங்குளம் வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த கதிர்காமநாதன் சசிகரன் (வயது 22) ஆகியோர் தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-15-250)

## இளைஞனை தூக்...

த்து சென்ற சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

நேற்றைய தினம் மிகப் பெரிய பட்டத்தினை சில இளைஞர்கள் கட்டி அதனை ஏற்றினர்.

இதன்போது பட்டம் ஏற்றியவரை 20 அடி உயரத்திற்கு இழுத்து சென்றது. பின்னர் பட்டத்தின் நூலினை அவர் கையை விட்டமையால் கீழே விழுந்து காயமடைந்துள்ளார்.

இவரை மற்றைய இளைஞர்கள் தூக்கி சென்று யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (மு)

## பதவி உயர்வை எதி...

தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்

இயலகமவை சேர்ந்த காங்கேசன்துறை படைமுகாமில் கடமையாற்றும் இராணுவ சிப்பாயான ஜி.வி.பிரேமரட்ண (வயது 43) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த இராணுவ சிப்பாய் பதவி உயர்வுக்கான மருத்துவ பரிசோதனைக்காக கடந்த 11 ஆம் திகதி பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர் அங்கு திடீரென சுகவீனமுற்ற காரணத்தினால் குறித்த சிப்பாயை இராணுவ வைத்தியசாலையில் தங்கவைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் குறித்த சிப்பாய் உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(2401)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

சகல விதமான சளி இருமல்களிற்கு
சிறந்த மூலிகை இருமல் பாணி
எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி

100% இயற்கையானது
உள்ளடக்கம்
ஆடாதோடை, திப்பலி,அதிமதுரம், கண்டங்கத்தரி, சிறு தேக்கு, மிளகு, பனங்கற்கண்டு.
தொடர்ந்து பாவித்து வருவதன் மூலம் ஆஸ்மா நோய் தணிவடையும்
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தயாரிப்பு:- எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் and Co
எண் 28,26, பேரின்ப நாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண் : 0776389356, 0777153571
(994)

உடனடி வேலைவாய்ப்பு
எமது Dynamic Holding நிறுவனமானது தமது புதிய கிளைகளை இவ்வாண்டு வடக்கு மற்றும் கிழக்கில் ஆரம்பிக்கவுள்ளது.
- வயதெல்லை 18 - 30 வரை
- முன் அனுபவம் அவசியமற்றது.
- தங்குமிட வசதிகள் உண்டு
- தாங்களும் O/L, A/L தகைமை இருப்பின் உடனே தொடர்பு கொள்ளவும்

(C-1224)
0772302795, 0786995702, 0766668385

Vacancy Office Assistant
Applications are invited to the post of office Assistant from a young active person with devotion to serve the disabled.
The Applicant should be able to maintain cash, Accounts and inventory, office correspondence and correspond in Tamil and English. Basic Computer Literacy is essential.
Applicants should send their applications **in their own Handwriting**, with testimonials of Experience and qualifications
An efficient person will have good promotional prospects.
Salary: Starts at Rs.15, 000.00 per month (negotiable based on qualifications and experience)
Applications close on: January 24. 2018
Association for Rehabilitation of the Disabled
**47/2, Adiyapatham Road, Thirunelvely North, Jaffna**

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-1120)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
- பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org